லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-2 ஜூலை-2017 மாத இதழ் விலை ₹10/-



## ரஜினியுடன் இணையும்

# விஜய்


கணேஷ்
பந்தல் அலங்காரம்
உங்கள் இல்லத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளுக்கு
தேவையான முகப்பு, வாழை மரம், V.I.P. சேர், சேர்,
டேபிள், சாமியானா பந்தல், சீரியல் லைட்,
வீடியோபோர்ட், போன்ற
அனைத்தும் சிறந்த முறையில்
அமைத்து தரப்படும்.
தொடர்புக்கு : K. மனோகர்
கே.கே.நகர், சென்னை - 78.
செல் : 98410 56561, 98415 56569


KANAGARAJ
99656 58111
Kovai
Builders
COIMBATORE.

# நன்மைகள் விளைந்தால் வரவேற்கலாம்..!

சிறப்புத் தலையங்கம்

வேலைவாய்ப்புப் போக்குகள் தொடர்பாகக் குறிப்பிட்ட கால இடை வெளியில் தரவுகளைத் திரட்ட களப்பணியைத் தொடங்கியிருக்கிறது மத்திய அரசு. நகர்ப் புறங்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், ஒட்டு மொத்தமாக ஆண்டுக்கு ஒரு முறையும் வேலைவாய்ப்பு பற்றிய புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படும். நாடு முழுக்க 80%-க்கும் மேற்பட்டவர்கள் முறைசாராத துறைகளில்தான் வேலை பெறுகின்றனர். முறைசாராத் துறையில் உள்ள வேலை வாய்ப்புத் தகவல்கள்கூட இனி முழுதாகத் திரட்டப்படும் என்று மத்திய புள்ளிவிவரங்கள், திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் டி.வி.சதானந்த கவுடா தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

உலகிலேயே இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள இந்தியாவில், மோடி ஆட்சியின் முதல் மூன்று ஆண்டுகளில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதில் முன்னேற்றம் இல்லை என்பது தொழில் துறையினர் உட்பட அனைவருக்குமே கவலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான கொள்கை களைத் தீர்மானிப்பதற்கு ஏற்ப அரசிடம் தரவுகள் இல்லை. தொழிலாளர் துறையிடம் உள்ள தரவுகள், குறிப்பிட்ட சில துறைகளைப் பற்றியவை மட்டுமே. அவையும்கூட எல்லா மாநிலங்களிலும் பெறப்பட்ட தகவல்கள் அல்ல.

இந்தியாவின் பரப்பளவு, முறைசாராத் துறைகளைக் கொண்டுள்ள தன்மை ஆகிய வற்றைப் பார்க்கும்போது, இப்போதைய நிலையை 'வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி' என்றும், 'வளர்ச்சியற்ற வேலைகள்' என்றும் கூறலாம் என்கிறார் நிதி ஆயோக் உறுப்பினர் பிவேக் தேவ்ராய்.

ஓராண்டில் எத்தனை கார்கள் விற்பனையாயின என்பது போன்ற தரவுகளைக் கொண்டு, வேலைவாய்ப்புகளை ஊகிக்கலாமா என்றும் பணிக் குழு பரிசீலித்துவருகிறது. வேலைவாய்ப்புகள் குறித்துத் தரவுகளைத் திரட்டும் பணி ஏப்ரல் மாதத்திலேயே தொடங்கிவிட்டது. பணிக் குழு அந்தத் தரவுகளை எப்படி ஒன்று சேர்க்கும், அதற்கு எப்படி விளக்கம் தரும் என்றும் பார்க்க வேண்டும். அதன் அடிப்படையில்தான் புதிய தொழிலாளர் கணக்கெடுப்பு இனி வடிவமைக்கப்படும். முதலில் எடுக்கப்பட்ட வேலைவாய்ப்புக் கணக்கெடுப்பு முடிவுகள் 2018 டிசம்பர் மாதத்தில் வெளியாகும் என்று அரசு வட்டாரங்கள் கூறுகின்றன. தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு (என்எஸ்எஸ்) நிறுவனம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை எடுக்கும் வேலைவாய்ப்பு பற்றிய கணக்கெடுப்பு 2011- 12-க்குப் பிறகு மேற்கொள்ளப்படவில்லை.

உலக அளவில் ஏற்பட்ட நிதி நெருக்கடியால் கடுமையான பொருளாதாரத் தேக்கநிலை ஏற்பட்டதால், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 2009-10-ல் ஒரு கணக்கெடுப்பை மேற்கொண்டது இங்கு நினைவுகூரத்தக்கது. நள்ளிரவில் ஜி.எஸ்.டி. யை அறிமுகப்படுத்தினால் மட்டும் நாடு முன்னேற்றப் பாதையை பயணிக்கும் என்று எதிர்ப் பார்ப்பது ஏமாற்று வேளை. அடிப்படையில் இளைஞர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு போன்ற பயன்பெறும் முன்னேற்ற வேலைகளில் களம் இறங்காதது தேசத்தின் கவலையாக மாறிவருகிறது. மத்திய அரசின் இந்தத் திடீர் ஞானோதயத்துக்கு 2019 மக்களவைத் தேர்தல் ஒரு காரணமாக இருக்கலாம். எனினும், இந்த முன்னெடுப்பால் நன்மைகள் விளைந்தால் வரவேற்கலாம்!

– ஆசிரியர்




# அடாவடி மெட்ரிக்...

# அலட்சியம் காட்டும் அதிகாரிகள்

மதுரை மாவட்டம், ஒத்தக்கடை அருகில் உள்ள காளிகப்பான் ஊரில் அமைந்துள்ள மெட்ரிக் பள்ளி அக்னு S. சுந்தர் ஆகும். இங்கே சம்மந்தமில்லாத ஒரு கொடுமை நடப்பதை கண்டுகொள்ளாத நிர்வாகத்தைக் கண்டு அதிர்ந்து விட்டோம்...

ஆம், குழந்தைகள் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக பெற்றோர்கள் காட்டும் ஆர்வம் மற்றும் எதிர்கால கனவுகள் அதிகம் இருந்தாலும், அதனை ஓரளவிற்கு சரிபடுத்த அரசு நடவடிக்கை எடுத்தாலும் வியாபாரமாக செய்யக்கூடிய மெட்ரிக் பள்ளிகளை கண்டு கொள்ளாத நிர்வாகம் செய்யும் அடாவடி, அதைக்காட்டிலும் வேதனையானது.

ஒத்தக்கடை பகுதியில் உள்ள அக்னு S. சுந்தர் பள்ளியில் 14 வருடம் வனவாசம் சென்றவரின் பெயர் கொண்ட காவல்துறையில் பணி செய்யக்கூடியவர் தன்னுடைய மகன் மற்றும் மகளை படிக்க வைக்கும்போது அவருக்கும் அவருடைய மனைவிக்கும் கருத்து வேறுபாடு காரணமாக பிள்ளைகளை பராமரிக்கின்ற வேலைகளை அவரது மனைவி மேற்கொண்டு வந்தார். இந்த நிலையில் தனது பிள்ளைகளின் பள்ளிப் படிப்பைப் பற்றி கண்டுகொள்ளாத கணவர் பள்ளியில் நான் இல்லாமல் எனது பிள்ளைகள் சம்மந்தப்பட்ட எந்தவித ஆவணங்களையும் கொடுக்கக் கூடாது என்று பள்ளி தலைமையாசிரியரிடம் கூறினார் என்று தெரியவில்லை.

குடும்ப நிலை மோசமான நிலைக்கு செல்ல இரு பிள்ளைகளின் தாய் சற்று தொலைவில் இருக்க யோசித்து இரண்டு பிள்ளைகளுக்கும் மதுரை கோரிப்பாளையம் பகுதியில் பள்ளியில் சேர்க்கைக்கான விண்ணப்பம் பெற்று அவரது சகோதரர் மற்றும் பெற்றோர் உதவியினால் பணம் செலுத்த செல்லும்போது ஏற்கனவே படித்த பள்ளியிலிருந்து பள்ளி மாற்றுச் சான்றிதழ் வாங்கி வரும்படி சேர்க்கக்கூடிய பள்ளியில் தெரிவித்தவுடன் அக்னு S. சுந்தர்

பள்ளி தலைமையாசிரியரிடம் கேட்கும்போது பிள்ளைகளின் தந்தை வந்தால் மட்டும்தான் பள்ளி மாற்றுச் சான்றிதழ் வழங்க முடியும் என்று கூறியவுடன், மாவட்ட ஆட்சியரிடம் பிள்ளைகளின் தாய் மனு கொடுக்க அதனை பரிந்துரை செய்தபடி இருக்க மனு மீது எந்த நடவடிக்கையும் இல்லை. இந்த செய்தி நம்மை வந்தடைந்தவுடன், பள்ளி தலைமையாசிரியரிடம் ஏன் டி.சி வழங்க மறுக்கின்றீர்கள்? என்று கேட்டதற்கு எங்கள் பள்ளியில் பிள்ளைகளை சேர்த்தது பிள்ளைகளின் தந்தைதான். அவர் வந்தால் மட்டுமே வழங்க முடியும் என்று தெரிவித்தபோது பெற்றோர் அல்லாத நிலையில் பாதுகாவலர் வாங்க முடியும் என்ற நிலை உள்ளபோது ஏன் பிள்ளைகளின் தாய் கேட்கும்போது வழங்க மறுக்கின்றீர்கள்? என் று கேட்டு நாங்கள் மதுரை எஸ்.பி.யிடம் புகார் தெரிவிக்கட்டுமா என்று கூறியதற்கு, எனக்கு ஒன்றுமில்லை ஐ.எம்.எஸ். அலுவலகத்தில் இருந்து கூறினால் நான் வழங்கி விடுகிறேன் என்று கூறினார்.

அடுத்த சில நொடிகளில் பிள்ளைகளின் தந்தைக்கு தொடர்பு கொண்டு நடந்தவற்றை தெரிவித்தார் பள்ளி தலைமையாசிரியர். உடனே பிள்ளைகளின் தந்தை அந்த பகுதியில் உள்ள ஒரு நபர்களை அழைத்துக்கொண்டு அவரது வீட்டுக்கு சென்று வீட்டிலிருந்து மனைவி, மகள் மற்றும் மகன் ஆகிய மூவரையும் வீட்டிற்கு வைத்து பூட்டிவிட்டு பெட்ரோல் வாங்கிவந்து கொளுத்தி விடுவதால் கணவர் தெரிவித்தவுடன் என்ன செய்வதென்று தெரியாத காவலரின் மனைவி அவசர உதவிக்கு காவல்துறை கட்டுப்பாட்டு எண் 100-க்கு தொடர்பு கொண்டு விவரங்களை தெரிவித்தார்.

அடுத்த சில நிமிடங்களில் அந்த பகுதிக் குட்பட்ட இரண்டு காவலர்கள் விரைந்து வந்து பூட்டினை உடைத்து காப்பாற்றினார். மேலும் இந்த தகவல் அறிந்த காவலர் மனைவி மற்றும் பிள்ளைகளை தொடர்ந்து மிரட்டியதால் மதுரை காவல் கண்காணிப்பாளரிடம் நடந்தவற்றை தெரிவிக்க, உடனே மதுரை ஒத்தக்கடை காவல் நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு நடவடிக்கை எடுத்து வழக்கு பதிவு செய்ய எஸ்.பி. உத்தரவிட்டார். காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

மேலும் சம்பந்தப்பட்ட பள்ளிக்கு சார்பு ஆய்வாளரை அனுப்பி பிள்ளைகளின் தாயுடன் சென்று பள்ளி மாற்றுச் சான்றிதழ் கேட்ட போது தர முடியாது என்று மறுத்ததுடன் சம்மபந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளர் பள்ளி தலைமையாசிரியரிடம் தொலைபேசியில் பேசி செவி சாய்க்காததால் மேல் நடவடிக்கைக்காக எழுதி அனுப்புவதாக பள்ளிகளின் தலைமை அலுவலகத்தில் சென்று மதுரை மெட்ரிக்குலேஷன் ஆய்வாளரும் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக மதுரை மெட்ரிக்குலேஷன் பள்ளி தலைமை அலுவலகத்தில் சென்று நடந்த விபரங்களை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க அதற்கு முன் பள்ளி நிர்வாகம் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் நைசாக பேசி தப்பிக்க வழி செய்து கொண்டிருந்தது. பள்ளி நிர்வாகத்திற்கு சாதகமாகபேசியகண்காணிப்பாளர்நீங்கள்புதிய பள்ளியில் சேர்த்துக் கொள்ளுங்கள் ஆர்.டி.ஐ. சட்டப்படி 8-ம் வகுப்பு வரை டி.சி. கேட்க மாட்டார்கள், நான் நீங்கள் சேர்க்கும் பள்ளியில் பேசிக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

மறுநாள் நாங்கள் பள்ளிக்கு பிள்ளைகளையும் அவரது தாயையும் அழைத்துக் கொண்டு பணம் கட்ட சென்றபோது அந்த பள்ளியின் தலைமையாசிரியர் டி.சி. வேண்டும் அல்லது மாவட்ட நிர்வாகத்திலிருந்து பேசினால் சேர்த்துக் கொள்வதாக பண்பாக கூறியவுடன் நாங்கள் உடனே மதுரை ஐ.எம்.எஸ். அலுவலகத்திலிருந்து அதே கண்காணிப்பாளரை தொடர்புகொண்டபோது அவர் அப்படியே அந்தர்பல்டி அடிப்பதைபோல அக்னு சுந்தர் பள்ளியில் கையூட்டு (பணம்) பெற்றுக் கொண்டு புருஷன் பொண்டாட்டி சண்டையினா நாங்க என்ன செய்ய முடியும் என்று மிகவும் கேவலமான முறையில் நடந்து கொண்டார்.

நடந்தவற்றை பொறுத்துக்கொண்ட நாங்கள் பத்திரிகையாளர்கள் என்று கூறினோம். நீங்கள் என்ன செய்ய முடியும் நாளைக்கு வாருங்கள், நான் நாளைக்கு போனில் பேசுகிறேன் என்று அலட்சியமாக கூறினார். இதனைத் பொருத்துக் கொள்ள முடியாமல் பிள்ளைகளின் தாய் கண்ணீர் விடுவதைக் கூட கருணையாக பார்க்காத கண்காணிப்பாளரை என்ன செய்வதென்று தெரியாமல் பிள்ளையின் கல்வி பயிலும் நலனை




மட்டுமே கருத்தில்கொண்டு அங்கிருந்து நகர்ந்தோம்.

பின்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு தொலைபேசியில் நடந்ததை தெரிவித்துவிட்டு மீண்டும் மாவட்ட ஆட்சியரை அணுகி மனு அளித்தோம். மனுநீதி உரிய நடவடிக்கை எடுக்க மக்கள் குறைதீர்க்கும் இடத்தை அணுகி ரசீது பெற்றுக்கொண்டு மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் திருமதி. செந்தில்குமாரி அவர்களிடம் பிள்ளைகளின் தாய் நடந்தவற்றை தெரிவிக்க நல்லெண்ணம் கொண்ட அந்த அதிகாரி உடனடியாக மதுரை வடக்கு தாசில்தாரிடம் கூறினார். மதுரை வடக்கு வட்ட தாசில்தாரை சந்தித்தவுடன் உடனடியாக புதிதாக பிள்ளைகளை பள்ளியில் சேர்க்கக்கூடிய பள்ளிக்கு வருவாய் அலுவலரை நேரடியாக அனுப்பி 8–ஆம் வகுப்பு சேர்க்கைக்கான நடவடிக்கை எடுத்தது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி மட்டுமல்ல, பிள்ளைகளின் தாய் பட்ட துன்பத்திற்கும் சந்தோஷத்தை அளித்தது.

மேலும் மதுரை வடக்கு வட்டாட்சியர் அக்னு S.சுந்தர் பள்ளியில் பள்ளி மாற்றுச் சான்று பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளனர்.

இந்த நேரத்தில் மதுரை மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் திருமதி. செந்தில்குமாரி, வடக்கு வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்களுக்கு நாமும் பிள்ளைகளின் தாயும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மிகவும் வேதனைப்படக் கூடிய அளவிலும் மனிதாபிமானமில்லாத வகையில் குழந்தைகளின் நலனில் அக்கறையில்லாத மதுரை மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் மாவட்ட அலுவலகத்தில் பணிபுரியக்கூடிய பொறுப்பில்லாத கண்காணிப்பாளர் மற்றும் அக்னு S. சுந்தர் பள்ளியின் தலைமையாசிரியர் மீது கடுமையான துறை ரீதியான நடவடிக்கையை தமிழக அரசு எடுத்ததால்தான் நம் தமிழ்நாட்டில் கல்வி வியாபாரமாக இல்லாமல கட்டாய கல்விக்கு வித்தாக அமையும்.

எனவே இதுபோன்ற அவலங்கள் தமிழகத்தில் ஒருசில இடங்களில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த நிலையை போக்கி அரசு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பொதுமக்களின் எதிர்ப் பார்ப்பாகும்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

மக்கள் விசாரணை

Applied in NEWS PAPER ASSOCIATION OF INDIA
லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-6 ஜுலை-2017 இதழ் - 2

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
A. மவுரியன், B.A. Dip. Journilisam.

• ஆசிரியர் குழு
A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன்,
V. அருணாச்சலம், காசி. அரங்கநாதன், மு. பரமசிவம்

• நிர்வாக ஆசிரியர்
வீ. வழிவேல், B.B.A.

• உதவி ஆசிரியர்
காக்களூர் பாபு தங்கவேல்

• துணை ஆசிரியர்கள்
ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார்,
S.கோபி, M. தரணி. எஸ். சரவணன், பி. மாரிமுத்து,
D. ரவி, வீரஆறுமுகம், A. பாலச்சந்தர்,
ந. நித்யா, கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி

• முதன்மை செய்தியாளர்கள்
சமயசெல்வம், மதுரை ராம்குமார், பிரகாஷ், சேலம்
சத்தியராஜ், நாமக்கல் பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,
நாகராஜ பெருமாள், S. யோவான் ஜான்
R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,
யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,
பா. சுப்பிரமணியன், நாகராஜ்,
மாரிமுத்து, சுரீ ஈஸ்வர்,
ராமசுப்பிரமணியன், சிலம்பரசன்,
அ. சீவராமன்,

• நிருபர்கள்
எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, ராஜேஷ்
அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்

• சட்ட ஆலோசகர்கள்
M. குணசீலன், B.Com.,M.L.,
M. சுதாகர், B.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :
எம். சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்

• இதழ் வடிவமைப்பு : AKS CREATIVE'S

அலுவலகம் :
மக்கள் விசாரணை
நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com
Information Contact : feedback@makkalvisaranai.com
Phone : 044 - 4354 2611, 93821 33334

Press & Registration of Book Act-in படி
செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள
நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

ஸ்ரீ குறுங்காலீஸ்வரர் துணை ஸ்ரீ பெரியாண்டவர் துணை ஸ்ரீ ஆத்மலிங்கேஷ்வரர் துணை

# SHREE SHANJANAA STORE

# ஸ்ரீ சஞ்சனா ஸ்டோர்

**No.10, N.T. Patel Road, Mandaveli, Nerkundram, Chennai - 600 107.**

**Cell : 9841737792, 8939406206, 9176377792**

# சிறுசேமிப்பு திட்டம் 2017 – 2018





**1st**
50 Nos
LED 24" TV (or) FRIDGE
VIDEOCON, LG (OR) GODREJ



**2nd**
50 Nos
3 Gram Gold Coin
(or)
Sewing Machine
USHA, SINGER (or) MERIT

## மாதம் ரூ.1000/–வீதம் 7 மாதம்

### சிறுசேமிப்பு திட்ட விதிமுறைகள்:



**3rd**
200 Nos
Wooden Cot 6'3"x4'0"
(or)
Kelvinator Air Cooler

- மாதந்தோறும் ரூ.1000/- கட்ட வேண்டும் ஏழு மாதம் மட்டும்.
- இந்த பரிசு மழைத்திட்டம் மொத்தம் 7 மாதம் மட்டுமே நடைபெறும். இதில் மொத்தம் 1000 உறுப்பினர்கள் இருப்பார்கள். இந்த பரிசு திட்டத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் நிச்சயம் பரிசு உண்டு.
- இத்திட்டத்தில் இணைந்திருக்கும் உறுப்பினர்கள் சந்தா கட்ட தவறினால் அவர்கள் இத்திட்டத்திலிருந்து நீக்கப்படுவார்கள்.
- உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதம் 05-ம் தேதி-ள் (சந்தா) பணம் செலுத்திட வேண்டும்.
- தை மாதம் 2018 அன்று ஒரே நேரத்தில் ஆயிரம் பேருக்கு குலுக்கல் முறையில் பொருட்கள் வழங்கப்படும். இடம் பின்னர் அறிவிக்கப்படும்
- உறுப்பினர்கள் தாங்கள் செலுத்தும் தொகையை உறுப்பினர் அட்டையில் பதிந்ததை உறுதி செய்தல் வேண்டும் இல்லையெனில் எங்கள் அலுவலகத்திற்கு தெரிவிக்கவும்.
- பிறகு உங்கள் பணம் நிறுவனத்தில் கட்டிய பிறகு எஸ்.எம்.எஸ் (SMS) வந்தால் மட்டுமே நிறுவனத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்று வாடிக்கையாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- நீங்கள் செலுத்திய பணத்திற்கு எஸ்.எம்.எஸ் (SMS) வரவில்லையென்றால் நிர்வாகத்தையோ (அ) ஏஜெண்டையோ உறுதி படுத்தி கொள்ள வேண்டும்.
- உறுப்பினர்களுக்கு பரிசுகள் அவர்கள் ஏஜெண்ட் வழியாக செலுத்தப்படும். உறுப்பினர் கார்டு கொண்டு வந்தால் மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- பரிசு பொருள் வேறு பொருட்களாகவோ அல்லது பணமாகவோ வழங்கப்படமாட்டாது.
- முடிவு எடுக்கும் அதிகாரம் நிறுவனத்திற்கு மட்டுமே உண்டு.



**4th**
200 Nos
Spring Mattress 6'3"x4'0"
(or)
Water Heater



**5th**
200 Nos
Wooden Bero
(or)
Pu Sofa



**6th**
200 Nos
Dressing Table
(or)
Steel Bero



**7th**
100 Nos
Wooden Dinning Table
(or) Glass Dinning Table
(or) Android Mobile

herboo.in

kongu Herboo™ chicken
"live healthy"

India's First
Antibiotic Free Chicken*

Tested & Certified by eurofins

TAMIL NADU VETERINARY & ANIMAL SCIENCES UNIVERSITY



# சிக்கன் உடம்புக்கு நல்லது!

பிராய்லர் கோழிகளுக்கு ஹார்மோன் ஊசிகள், ஆன்டிபயாட்டிக் ஊசிகள் போன்றவைகளை பண்ணையாளர்கள் கொடுத்து வளர்க்கிறார்கள் இதனால் உடல் நலத்திற்கு பெரும் கேடு ஏற்படுகிறது என்ற ஒரு விஷயம் சமீபத்தில் மக்கள் மத்தியில் மிகுந்த பரபரப்புடன் பேசப்பட்டு வருகிறது.

முன்பெல்லாம் சளி, இருமல் போன்ற நோய்களுக்கு கோழிக்கால் சூப் வைத்து குடித்தால் சரியாகிவிடும் என்று நம்பப்பட்டு வந்தது. அது போல குடிக்கும் போது சளி தொந்தரவு குணமாகியும் உள்ளது.

தற்போது விற்பனை செய்யப்பட்டு வரும் பிராய்லர் கோழிகளுக்கு, பாக்டீரியா தொற்று ஏற்படாமல் இருக்கவும், அவை நன்கு கொழுத்து வளரவும் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் 6 விதமான ஆண்டிபயாடிக் ஊசிகளை அவற்றின் உடலுக்குள் செலுத்துகின்றனர் என மத்திய அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம் ( Centre for Science and Environment - CSE) சார்பில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஆன்டிபயாட்டிக் மருந்துகள் செலுத்தப்படுவதன் காரணமாக அதனை சாப்பிடும் மனிதர்களுக்கும் ஆன்ட்டிபயாடிக்கினால் குணப்படுத்த முடியக் கூடிய சாதாரண நோய்களைக் குணப்படுத்த கூட மிக அதிக வீரியம் வாய்ந்த ஆன்டிபயாட்டிக் மருந்துகளை பயன்படுத்தும் நிலை ஏற்படுகிறது. இதனால் மனித உடலுக்குள்ள நோயெதிர்ப்பு சக்தியின் திறன் கேள்விக் குறியாகிறது.

மிகச்சாதாரண சளித் தொந்தரவுக்கு கூட மருந்தாக பயன்பட்ட கோழிக்கறி இன்று பல்வேறு நோய்களை வரவழைக்கும் ஒரு கருவியாக மாறிப்போய் விட்டது.

### இதற்கான தீர்வு என்ன?

கோழி சாப்பிடுவதையே நிறுத்திவிடலாமா? இல்லை அதுதான் சரியான முடிவா?

இல்லவே இல்லை. இருக்கவே இருக்கின்றன ஃப்ரீரேஞ்ச் கோழிகள், தீவனக் கோழிகள், இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட கோழிகள்.

### ஃப்ரீ ரேஞ்ச் கோழிகள்

இவை சாதாரணமாக கிராமங்களில் எந்த ஒரு கண்காணிப்பும் இல்லாமல் சுதந்திரமாக சுற்றித்திரிந்து கிடைப்பதை சாப்பிட்டு வளரும்

கோழி வகைகள். இவை தானாகவே இயற்கையில் கிடைக்கும் புழு, பூச்சிகள், தீவனம் இவற்றை உண்டு வளர்வதால் இக்கோழிகளின் இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றில் நம் உடலுக்கு தேவையான புரதம், கொழுப்பு, அமினோ அமிலங்கள், சேர்ந்த ஒரு முழு சமச்சீரான ஊட்டச் சத்து கிடைக்கிறது.

ஃப்ரீரேஞ்ச் கோழியின் முட்டையின் மஞ்சள் கருவின் நிறம் நல்ல அடர்த்தியான மஞ்சளாக இருக்கும். இதுவே மிகவும் சத்தான மற்றும் உடலுக்கு போஷாக்களிக்கும் முட்டை ஆகும்.

**தீவன கோழிகள் மற்றும் இயற்கை முறையில் வளர்க்கப்படும் கோழிகள்**

என்னதான் ஃப்ரீரேஞ்ச் கோழிகள் மிகவும் நன்மைதரக்கூடியவை என்றாலும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அவற்றை ஃப்ரீரேஞ்ச் ஆக வளர்க்க முடியாது. தொழில்முறை கோழி வளர்ப்பில் இந்த விஷயம் சாத்தியமானது அல்ல.

இப்போது நமக்கு கைகொடுப்பவை தீவன மற்றும் இயற்கை முறை கோழி வளர்ப்பு முறை. இந்த வகை கோழி வளர்ப்பில் கோழிகள் நல்ல காற்றோட்டமான இடங்களில், இயற்கை தீவனங்கள் மற்றும் ஊட்டசத்துமிக்க உணவுகள் அளிக்கப்பட்டு நன்றாக வளர்க்கப்படுகின்றன.

இவ்வாறு இயற்கை தீவனங்கள் கொடுக்கப்பட்டு காற்றோட்டமான முறையில் வளர்க்கப்படும் கோழிகளைப் பற்றி தெரிந்துக் கொள்ள வலைத்தளங்களில் தேடும் போது ஹெர்பூ சிக்கன் (Herboo Chicken) என்ற நிறுவனம் கண்ணில்பட்டது. அதுகுறித்து மேலும் ஆராய்ந்துப் பார்த்ததில், அவர்களின் கோழி வளர்ப்பு முறைகள் பற்றி அறிந்துக் கொள்ள முடிந்தது.

இவர்கள் பிராய்லர் வகை கோழிகளை எந்தவித ஆன்டிபயாட்டிக் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் இல்லாமல் இயற்கையான முறையிலேயே வளர்த்து நமக்கு அளிக்கின்றனர். இவர்களது கோழி வளர்ப்பு முறையானது ஃப்ரீரேஞ்ச் கோழிகளுக்கு இணையாக உள்ளது. கோழி வளர்ப்பினை வணிகமாக மட்டும் கருதாமல் அதனை உடல்நலம் சார்ந்த சமூகப் பார்வையுடனும் கருத்தில் கொண்டு செயல்படுவதையும் உணர முடிகிறது.

ஹெர்பூ சிக்கன் வளர்ப்பவர்களும் அவ்வாறே ஏலக்காய், கிராம்பு போன்ற மருத்துவக் குணம்மிக்க மூலப்பொருட்களையே தீவனங்களாகக் கொடுத்து வளர்க்கின்றனர். இதனால் இயற்கையாகவே கோழிகளுக்குள் நோய் எதிர்ப்பு திறன் உண்டாகிறது. மேலும் பன்றிக்காய்ச்சல் ஏற்படுவதற்கான நுண்ணுயிர்கள் அழிக்கப்படுவதுடன், பிற்காலத்தில் பன்றிக்காய்ச்சல் ஏற்பட வாய்ப்பும் இருக்காது.

**இது எங்கே, எப்படி கிடைக்கும்?**

வலைத்தளங்களில் கிடைத்த தகவல்படி, ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்ட ஹர்பூ சிக்கன் நிறுவனம், கோழி வளர்ப்பில் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் செயல்பட்டு வருகிறது. தற்போது சென்னையில் பல்வேறு இடங்களில் ஹெர்பூ சிக்கன் கிளைகள் உள்ளன. மேலும் வாடிக்கையாளர்களிடம் பெற்ற வரவேற்பால் ஹர்பூ சிக்கன் விரைவில் கோயம்புத்தூர், ஈரோடு, பெங்களூர் மற்றும் தென்னிந்தியாவில் பல்வேறு இடங்களில் கிளைகள் தொடங்க உள்ளதாகவும் தெரிகிறது.

இப்போது ஹெர்பூ சிக்கன் எப்படி கிடைக்கும் என்று பார்க்கலாம். 'ஹெர்பூ சிக்கன் (Herboo Chicken)' என்ற பிராண்டில் முழுக்கோழி, விங்ஸ், லிவர், போன்லஸ் போன்ற பல்வேறு வகைகளில் வாடிக்கையாளர்கள் தேவைக்கு ஏற்ப சுமார் 25க்கும் மேற்பட்ட வகைகளில் தனித்தனியாக இங்கு வாங்கிக்கொள்ள முடியும். மேலும் போன், இண்டெர்னெட் என எங்கிருந்து ஆர்டர் செய்தாலும் சுகாதாரமான முறையில் வெட்டி பேக் செய்து வீட்டுக்கே வந்து ஹோம் டெலிவரி செய்து தருகிறார்கள். நிறைய பெண்கள் குழந்தைகளுடன் வந்து நேரடியாகவே வாங்கிச் செல்கிறார்கள்.

மேலும் ஹெர்பூ சிக்கன் பற்றித் தெரிந்துக் கொள்ள http://herboo.in என்ற இணையதளத்தை பாருங்கள் நண்பர்களே.

**தீர்வு:** ஆன்டிபயாட்டிக் அச்சமின்றி கோழிக் கறி சாப்பிடவும், ஆரோக்கியமாக வாழவும், ஹெர்பூ சிக்கன் மாதிரியான இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட, நச்சுதன்மையற்ற கோழிக் கறியை வாங்குவதுதான் சிறந்த தீர்வாக இருக்கும்.

– வடிவேல்




# அழிந்துவரும் பாரம்பரிய கூத்துக்கலை!

## கவலைப்படாத தமிழக அரசு

தேசப்பற்று, இறை நம்பிக்கை, சுய மரியாதை ஆகியவற்றை பறைசாற்றி, மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்திய தெருக்கூத்து கலைஞர்கள், நவீனமயமாக்கலின் ஆதிக்கத்தால் நாடகத் தொழிலை விட்டு விலகி, கூலித் தொழிலாளர்களாக உருவெடுத்துள்ளனர். ஆனாலும் அழிந்து வரும் தெருக்கூத்து கலையையும், கலைஞர்களையும் காப்பாற்ற வேண்டும் என்று குரல் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

கடந்த 30 ஆண்டுகளாக தெருக்கூத்து கலையில் ஈடுபட்டு வரும் திருவண்ணாமலை மாவட்டம், நல்லவன்பாளையம் கிராமத்தில் வசிக்கும் முத்தமிழ் கலை மன்ற நிறுவனர் ஆ.தே.முருகையன் கூறியதாவது...

சித்திரை மற்றும் ஆடி மாதம் என்றால் தெருக்கூத்து கலைஞர்களைப் பிடிக்கவே முடியாது. ஒரே மாதத்தில் 20–க்கும் மேற்பட்ட நாடகங்கள் அரங்கேற்றப்படும். படித்தவர்கள், பாமர மக்கள் என்று அனைத்து தரப்பினரும் விரும்பி பார்த்த காலம் அது. குறைந்த ஊதியம் என்றாலும் நிறைவாக இருந்தது. காலப்போக்கில் தெருக்கூத்துக் கலை நலிவடைந்துவிட்டது.

தெருக்கூத்து கலைஞர்கள் எண்ணிக்கையை 30 ஆண்டுகளில் 10 சதவீதமாக குறைந்துவிட்டது. ஈச்சம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த எல்லப்பன், தனக்குக் கிடைத்த ஆசிரியர் வேலையைத் துறந்து, தெருக்கூத்து கலையை விரும்பி ஏற்றுக்கொண்டார். இப்போது அப்படி செய்ய ஆளில்லை.

தெருக்கூத்து கலை மற்றும் கலைஞர்கள் வாழ வேண்டும் என்றால் அரசு உதவ வேண்டும். அரசு நடத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். திருவண்ணாமலை மாவட்டத்தில் நடத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் உள்ள ஆட்சியர்கள் வாய்ப்பு கொடுத்தால் அந்தந்த மாவட்டங்களில் உள்ள கலைஞர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

தெருக்கூத்து கலைஞர்கள் நடத்தும் வீதி நாடகங்களைக் கண்டு ரசிக்க குடும்பத்து–டன் மக்கள் சென்ற காலம் மறைந்தேவிட்டது எனலாம்.

எய்டஸ் விழிப்புணர்வு, அனைவருக்கும் கல்வி, முழு சுகாதாரம், ஊனமுற்றோர் விழிப்புணர்வு, குடிநீர் பாதுகாப்பு, மத நல்லிணக்கம் போன்ற அரசுத் துறை சார்ந்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வரும் இக்குழுவினர் தனது இலட்சிய கலைப் பயணத்தை இன்றளவும் சுறுசுறுப்பாகத் தொடர்ந்து வருகின்றனர்.

வன்னிய நாடகம், கர்ணமோட்சம், வாலி மோட்சம், இராவண சம்ஹாரம், ரேணுகா சம்ஹாரம், கெங்கை அம்மன், கண்டன் கார்கோடன் போன்ற நாடகங்கள், சுந்தர் கல்யாணம், பக்த மார்க்கண்டேயன் போன்ற தெருக்கூத்துகள் இக்குழுவினருக்குப் பெயர் தேடித் தந்துள்ளது.

எமதர்மன், காலதண்டன், தும்புராட்சதன், வீரசிம்மன், காளிகாதேவி, காசிபராஜன், பரமசிவன், கர்ணன், இராவணன் போன்ற புராண கதாபாத்திரங்கள் ஏற்று நடித்து அந்தந்த பாத்திரமாகவே பார்வையாளர்களின் இதயத்தல் பதிந்துள்ளார் முருகையன்.

ஒவ்வொரு ஆண்டும் ஜவ்வாதுமலை மற்றும் கல்வராயன் மலை கோடை விழாக்களிலும், திருவண்ணாமலை தீபவிழா, அரசு பொருட்காட்சிகளிலும் இவரது தெருக்கூத்து நாடகங்கள் தொடர்ந்து நடைபெறும். அருணை தமிழ்ச் சங்கத்தின் என்.எஸ்.கலைவாணர் விருதும் ரூ. 25 ஆயிரத்திற்கான பொற்கிழியும் பெற்றுள்ளார். தமிழக அரசின் கலை பண்பாட்டு துறையும், திருவண்ணாமலை மாவட்ட கலை மன்றமும் இணைந்து வழங்கும் சிறந்த நாடகக்கலைஞர்களுக்கான கலை நன்மணி விருது கடந்த 2012–13 ஆம் ஆண்டில் பெற்றுள்ளார்.

நான் ஆறு அடி உயரமாக ஆஜானுபாகுவாக இருந்ததால் எனக்கு எமதர்மன் வேஷம் கொடுத்தார்கள். அந்த வேஷம் எனக்கு பொருத்தமாக இருந்ததால் தொடர்ந்து எமனாகவே நடிக்க அழைத்தனர். கிராமங்களில் நான் சென்றாலே எமதர்மராஜா வந்துட்டாரு என்று குழந்தைகள் பாசத்துடன் அழைப்பார்கள்.

மாவட்டத்தில் அரசு சம்பந்தமான போக்குவரத்து துறை, இயற்கை பேரிடர் அபாயம் குறைப்பு, வாக்காளர் சேர்க்கை விழிப்புணர்வு, எய்ட்ஸ் விழிப்புணர்வு, ஊன முற்றோர் விழிப்புணர்வு போன்றவற்றை தெருக்கூத்து நாடகங்கள் மூலம் ஏற்படுத்தி வருகிறேன்.

இந்த பகுதியில் என்னை தெரியாத கிராமங்களே கிடையாது. தற்போது சினிமாவிலும் எமதர்மன் வேஷத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்து நடித்துள்ளேன். தொடர்ந்து எம தர்மனாக நடிப்பேன். என்னுடன் நவநீத நாட்டுப்புற கலைஞர்களுக்கும், முத்தமிழ் கலை மன்றம் சார்பில் 50–க்கும் மேற்பட்டோருக்கும் நடிக்க வாய்ப்பு கொடுத்து வருகின்றார்.

தென்னிந்திய திரைப்பட நடிகர் சங்கத்தில் திருவண்ணா மலை மாவட்ட நாடக, நடிகர்கள் சங்க உறுப்பினர்களை இணைக்க விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நாடக நடிகர்களை திரைப்படத் துறையிலும் கால்பதிக்க ஏற்பாடு செய்துள்ளார்.

பாரம்பரிய கூத்துக் கலையை மீட்டு கலைஞர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட மத்திய, மாநில அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும். அதேபோல் திரைப்படத் துறையினரும் நம் தாய்நாட்டின் பாரம்பரிய கூத்துக் கலை அழிந்து விடாமல் இருக்க உதவிக்கரம் நீட்ட வேண்டும் என கூத்துக் கலைஞர்களின் எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

– குருதேவ்





ஆ. மவுரியன்

சரித்திரத் தொடர் 7

தமிழ் மண்ணின் வீர வரலாறு

# மாவீரன் மருதநாயகம்

மண்ணுரிமை போரில், தனது நிலைக்கு மருதநாயகம் வந்ததை வரவேற்று வாழ்த்து செய்தி அனுப்பினார்.

ஆற்காடு நவாபுக்கு அடுத்து என்ன செய்வது புரியவில்லை. பயம் வாட்டியது. சிவகங்கை சீமையின் விஷமியான தாண்டவராயன் “நீங்க ஒன்றும் பயப்படாதீங்க” என்று செயற்கையாக ஆற்காடு நவாபுக்கு தைரியமூட்டினான். இனி, மருதநாயகத்தை போரினால் வெல்ல முடியாது! இனி தந்திரம் தான் தீர்வு என்பதை உணர்ந்து செயல்பட்டான் தாண்டவராயன்! துரோகிகளை விலை பேசினான்!

இறுதியாக மதுரையில் மருத நாயகத்தின் கோட்டை முற்றுகையிடப்பட்டது. தீவிரமான முன்னேற்பாடுகளுடன், நிறைய ஆயுதங்கள், ஆயிரக்கணக்கான வீரர்கள், உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவாசிய தேவைகளுடன் ஆங்கிலேயப்படைகள் திரண்டன. 1763 பிப்ரவரி மாதம் மருதநாயகம் ஆங்கிலேயர்களின் கொடியை தனது பீரங்கி வாயிலில் வைத்து வெடித்து சிதற செய்து தன் கோபத்தை வெளிப்படுத்தினார். தொடங்கியது ‘மதுரை போர்’!

மதுரை போர் உக்கிரமடைந்தது! நாட்கள் பல கடந்து, வாரங்களாக நீடித்தது முற்றுகை! மருதநாயகத்தின் கோட்டை, நகரிலிருந்து துண்டிக்கப்பட்டது. உணவு, ஆயுதங்கள், மருந்துகள் என காக்கா, குருவி கூட நுழையவிடாமல் தடுக்கப்பட்டது. மருதநாயகம் சரணடைந்தால் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்று ஆங்கிலேயர்கள் தூது அனுப்பினர். மண்டியிட மாட்டேன் என்றார் மாவீரன் மருதநாயகம். அப்படி சிந்திப்பதே குற்றம் என கருதுபவராயிற்றே!

நாலாயிரம் வீரர்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆங்கிலேய அதிரடிப்படை, இரண்டாயிரம் குதிரைகள் என மருதநாயகத்துக்கு எதிராக முற்றுகை வலுத்தது. மருதநாயகத்தின் படையினர் பீரங்கிகளால் அதிர வைத்தனர். பின்வாங்கி

ஓடிய ஆங்கிலேயர்கள் மதுரை தெப்பக் குளத்துக்கு அருகே பதுங்கினர். ஆங்கிலேயர்கள் அணியில் இருந்த இந்தியப் படையினர் போரில் ஈடுபடுவது குறித்து குழம்பிக் கொட்டிருந்தனர்.

அச்சமயத்தில், இந்திய வீரர்களின் குழப்பத்தை பயன்படுத்தி மருதநாயகம் நடத்திய தாக்குதலில் படு தோல்வியடைந்தது ஆங்கிலேயப்படை. வைகை நதி சிவந்தது! போர் தற்காலிகமாக நின்றது.

கோட்டையில் மருதநாயத்துக்கு ஆதரவாக பிரெஞ்சுப் படைகளும் தளபதிகளும் உறுதியோடு நின்றார்கள். அவர்களில் ஒருவர் மார்ச்சந்! அவருக்கும் மருதநாயகத்திற்கும் இடையில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தது. எனினும் அவரே சிறந்த தளபதி என்பதை உணர்ந்த மருதநாயகம் அவருக்கு முன்னுரிமை கொடுத்தார்.

ஒருவாரம் கழித்து *15.09.1763*ல் மீண்டும் போரை தொடங்கினர் ஆங்கிலேயர். அப்போதும் தோல்வி. ஆங்கிலேயர்களின் தோல்வியில் கிடைத்த அமைதியில், தற்காலிக இடைவெளியை சரியாக பயன்படுத்தினார் மருதநாயகம்! கோட்டைக்குள் உணவு, ஆயுதங்கள், மருந்துகள் கொண்டு வரப்பட்டு அடுத்த போருக்கு தயாரானார்கள்.

ஆங்கிலேயர்கள் தங்கள் படையை பலப்படுத்தி மீண்டும் மதுரைக்கு வந்தனர். *31.01.1764* ல் மும்பையிலிருந்து சிறப்பு ஆங்கிலேய அதிரடிப் படையும் மதுரைக்கு வரவழைக்கப்பட்டது. இவர்கள் தொண்டி துறைமுகத்தில் இறங்கினர். மதுரையை சுற்றியிருந்த குட்டி, குட்டி அரசுகளான பாளையக்காரர்களையெல்லாம் ஆங்கிலேயர்கள் வளைத்தனர்.

ஆங்கிலேயர்களையும், ஆற்காட் நவாபையும் ஆதரிப்பவர்கள் தங்களை தாங்களே அழித்துக் கொள்வதற்கு சமம் என்றும், தனக்கு பாளையக் காரர்கள் அதாவது சிற்றரசர்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் கடிதம் எழுதினார் மருதநாயகம்.

முன்பு ஹைதர் அலியும், மருதநாயகமும் திண்டுக்கல் அருகே போரிட்டதை குறிப்பிட்டிருந்தோம். இப்போது வரலாறு மாறியது. இருவரும் தாய் நாட்டுக்காக ஓரணியில் திரண்டனர். பழைய சம்பவங்களை மறந்த மருதநாயகம், ஹைதர் அலியிடம் ராணுவ உதவியை கோரினார்.

"நானும், நீயும் வேறல்ல. நமது படையும், நாடும் வேறல்ல" என்று சகோதர உணர்வோடு ஹைதர் அலி கடிதம் எழுதி தனது ஆதரவை வழங்கினார். (நன்றி : C. Hayavadana Rao, History of Mysore)

பிப்ரவரி *1764*ல் ஹைதர் அலி, சுலைமான் என்ற தளபதியின் கீழ் ஒரு பெரும்படையை மருதநாயகத்துக்காக அனுப்பி வைத்தார். போதாக் குறைக்கு *19.02.1764*ல் பிரெஞ்சுப் படைகளும் வந்து சேர்ந்தது.

உற்சாகத்தில் சிலிர்த்து எழுந்தார் மருதநாயகம். அவரது நிலப்பரப்பின் முக்கிய எல்லைகளில் படைகள் முன்னிறுத்தப்பட்டது. வடக்கே நத்தம், தெற்கே பாளையங்கோட்டை பகுதிகளில் ராணுவம் பலப்படுத்தப்பட்டது. பாதுகாப்பு அரண்கள், அகழிகள், மணல் மேடுகள் என தற்காப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மீண்டும், மீண்டும் ஆங்கிலேயர்கள் சளைக்காமல் மதுரையை குறிவைத்து போரிட்டனர். நவீன ஆயுதங்களை இங்கிலாந்திலிருந்து வரவழைத்தனர். -தொடரும்.



# திருவண்ணாமலையில்

# சாமியாடி என்ற பெயரில் பெண் பித்தன் சசிகுமார்




## கண்டுகொள்ளாத காவல்துறை!

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை வட்டம், கண்டியாங்குப்பம் கிராமத்தில் ஒரு வாரத்திற்கு முன்பு வரை வசித்து வந்த சசிகுமார் ஒரு வாரத்திற்கு முன்பு வரை என சொல்லும் பொழுதே உங்களுக்கு புரிந்திருக்கும். இந்த சசிகுமார் ஊரில் ஆள் இல்லை என்று. ஆள் இல்லை என்றால் எல்லாம் தலைமறைவுதான்! என்ன குற்றம் செய்துவிட்டு தலைமறைவானான் என்பதை பார்ப்போம்...



சசிகுமார்

என்ன நடந்தது என்பதை விசாரிக்க நமது மக்கள் விசாரணை குழு கண்டியாங்குப்பம் கிராமத்திற்கு சென்றது. கண்டியாங்குப்பத்தில் உள்ள பொன்முடி ராயர் ஆலயம் சென்றோம். ஆலயம் அருகில் இருந்த ஒரு நபரை சந்தித்து சசிகுமாரை பற்றி விசாரித்தோம், பின்புதான் பல திடுக்கிடும் தகவல்கள் அந்நபரின் மூலமாக வெளியானது.

தங்களின் பெயர் என்ன என கேட்டதற்கு என் பெயர் ராஜப்பன் என்றவர், அந்த சசிகுமார் என்பவனுக்கு பெண்ணை கொடுத்த

பாவி நான்தான் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார் ராஜப்பன்.


ராஜப்பன்

உங்கள் மகளைப்பற்றி கூறுங்கள் என சொன்னதும், என் மகள் சரண்யா பி.எஸ்.ஸி., வரை படித் திருக்கிறாள். ஆனால் அவள் வாழ்வே பாழாய்ப் போனது என புலம்ப ஆரம்பித்தார்.

உங்கள் மகளுக்கு எப்பொழுது ? எங்கு? திருமணம் ஆனது? என்று கேட்டோம். 08–06–2014 அன்று திருவண்ணாமலை என்.எஸ். சித்ரா மஹாலில் பிரம்மாண்டமான முறையில் திருமணம் நடந்தது என கூறியவர் கண்கலங்க ஆரம்பித்தார்.

இந்த திருணமத்தில் என்ன பிரச்சனை, சரண்யாவுக்கும், சசிகுமாருக்கும் இடையில் என்ன நடந்தது? என கேட்டதற்கு என் மகள் திருமணத்திற்கு முன்பே நான் படிக்க வேண்டும், எனக்கு இப்பொழுது திருமணம் வேண்டாம் என கூறினாள்.

திருமணத்திற்கு பின்பு என் மகள் சரண்யாவை படிக்க வைக்கிறேன் என சசிகுமார் சொன்னதை நம்பி திருமணம் செய்து வைத்தோம்.

திருமணத்திற்கு பிறகு சரண்யாவை படிக்க வைத்தாரா? என கேட்டதற்கு, அவன் எங்கே படிக்க வைத்தான்!

நாங்கள் தான் படிக்க வைத்தோம். படித்து முடித்ததும், என் மகளை சசிகுமார் அழைத் துச் செல்வான் என பார்த்தோம். ஆனால் அழைத்துச் செல்லவில்லை. சரி, என்று நாங்களே சரண்யாவை சசிகுமார் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டு வந்தோம் என கூறினார்.

தங்கள் மகள் சரண்யாவிடம் பேச முடியுமா? என கேட்டதற்கு உடனே சென்னை யில் இருக்கும் தன் மகளை அலைபேசியில் அழைத்து எங்களிடம் பேச வைத்தார்.

சரண்யா கூறியதாவது, என் கணவர் சசிகுமாருடன் சேர்ந்து வாழ ஆசையுடன்தான் சென்றேன். ஆனால் அவர் தினமும் இரவு 9 மணிக்குமேல் எங்கள் ஊரில் உள்ள பொன் முடி ராயர் கோயிலில் சாமி ஆடி வருவது எனக்கு பிடிக்கவில்லை.

இனி இப்படி சாமி ஆடி அருள் சொல்வ தெல்லாம் வேண்டாம் என கூறினேன். ஆனால் என் கணவர் "நான் உன்னை விட்டாலும் விடு வேனே தவிர, சாமி ஆடுவதை விட மாட்டேன்" என கடிந்து கொண்டார். இதெல்லாம் எனக்கு பிடிக்காத காரணத்தால் நான் என் தாய் வீடு சென்று விட்டேன் என கூறி வேதனைப் பட்டார்.

மேலும் இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வு கொண்டுவர எங்களைச் சேர்த்து வாழ வைக்க என் தந்தை திருவண்ணாமலை மாவட்ட சமூக நல அலுவலகம் நாடினார்.

அறிவுரை கூறி எங்களை சேர்த்து வாழ வைக்க மாவட்ட சமூகநல அலுவலர் முனைவர் கிறிஸ்டினா, தா. டர்த்தி அவர்கள் மேற் கொண்ட விசாரணையில் பல சகிக்க முடியாத தகவல்கள் எனக்கு தெரியவந்தது.

"சாமி ஆடும் என் கணவர் சசிகுமார் சபல புத்திக்காரன்" என்று எங்களுக்கு தெரியவந்தது. இதுமட்டும் இல்லாது எங்களூரைச் சேர்ந்த கிருஷ்ணப்பிரியா (மைனர்) என்னும் பெண் ணின் வாழ்க்கையையே அவன் அழித்திருக் கிறான் என்பது இந்த விசாரணையில்தான் எங்களுக்கே தெரிய வந்தது.

இப்பொழுது அந்த பெண் கிருஷ்ணபிரியா (மைனர்) மூன்று மாத கர்ப்பிணியாம். இதுவும் அவர்களின் விசாரணையில்தான் தெரிய வந்தது. கிணறு வெட்டப்போனால் பூதம் கிளம்பும் என்பார்கள். அது என் வாழ்வில் உண்மையாகி விட்டது.

இப்பொழுது உங்கள் கணவர் சசிகுமா ருடன் சேர்ந்து வாழ உங்களுக்கு விருப்பமா? என கேட்டதற்கு சட்டென்று இனி ஜென்மத் திற்கும் அவனுடன் சேர்ந்து வாழ மாட்டேன்.

இதுகுறித்து திருவண்ணா மலை மாவட் டத்தில் வீரமங்கை வெற்றியம் என்ற சமூக அமைப்பின் செயலாளரும், வழக்கறிஞருமான நா. மகேஸ்வரி என்பவரிடம் சசிகுமாரைப்






புவனேஸ்வரி

பற்றியும் அவர் தலைமறைவாய் இருப்பதைப் பற்றியும் விசாரித்தோம்...

இதுகுறித்து ஊர் பொதுமக்கள் நியாயம் கேட்கச் சென்றால், "நான் அப்படித்தான், முடிந்தால் கோர்ட்டில் போய் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றான் சசிகுமார்.

காவல்துறை இவன் மீது (எப்.ஐ.ஆர்) போட்டதோடு மட்டுமல்லாமல் அவனைத் தேடிப்பிடித்து கைது செய்ய வேண்டும். அதுமட்டுமில்லாது, இந்த மோசமான விஷயத்திற்கு துணைபோன மைனர் பெண்ணின் தாய் வள்ளியையும் கைது செய்ய வேண்டும் என்றார் மகேஸ்வரி.

பெண்களுக்காகபோராடும்சமூகஆர்வலர் புவனேஸ்வரி என்பவரிடம் இந்த விவகாரத்தை பற்றி கேட்டோம், கேட்டவுடன் பொங்கி எழுகிறார் புவனேஸ்வரி.

பாவம் சரண்யா என்ற பெண் சசிகுமார் என்பவனை திருமணம் செய்து கொண்டு தனியாக வாழ்கிறாள். அதே சமயம், அம்மு (எ) கிருஷ்ணப்பிரியா ஊரறிய திருமணம் ஆகாமலேயே பிள்ளை சுமக்கிறாள்.

இவள் 17 வயது மைனர். இன்னும் ஒரு மாதத்தில் இந்த பெண் மேஜராகிவிடுவாள், மேஜரானதை காரணம் காட்டி சசிகுமார் என்ற மிருகம் தப்பிக்க வாய்ப்புள்ளது.

இவர்கள் எல்லோரும் கவலைப்படுவது ஜூலை மாதம் முடிவில் அம்மு (ஏ) கிருஷ்ணப்பிரியா (மைனர்) மேஜராகிவிடுவாள், மேஜராகி விட்டால் சசிகுமார் தப்பிக்க வழியிருக்கும். அதற்குள் அவனை கைது செய்து தண்டிப்பதன் மூலம் பல பெண்கள் காப்பாற்றப்படலாம் என போராடி வருகிறார்கள்.

திருவண்ணாமலை என்றால் பெண்ணுக்கு 50% கொடுத்த மலை, ஆணவத்தை அழித்த மலை என்றெல்லாம் சொல்கிறார்கள்.

சசிகுமாரின் அக்கிரமத்தை கண்டியாங்குப்பம் பொதுமக்கள் கண்டிக்காமல் விட்டதைப் போல மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் நீதிமன்றமும் கண்டிக்காமல் விட்டால் அவர்களுக்கு அருள்வாக்கு என்ற பெயரில் சாமியாரும் சசிகுமார் தப்பித்து விடுவான்.

நீதிபதிகளுக்கே தண்டனை கொடுக்கும் நம் நாட்டில் நீதியை நிலைநாட்ட, பெண் வன்கொடுமை நிகழ்த்தியிருக்கும் சசிகுமாருக்கு தண்டனை கொடுக்காமல் விட்டால் நீதி அல்லா செத்துவிடும்.

மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் நடவடிக்கை எடுக்குமா?

**– ந. நித்யா**

## உண்மை பேசுகிறது...!



நான் உங்களிடம் ஒரு முக்கியமான தகவல்களை பகிர உள்ளேன். அது என்னவென்றால்.. நான் கடந்த ஏழு ஆண்டுகளாக காவல் துறையில் பணியாற்றி வருகிறேன்.அவ்வாறு என் வேலை பணி காரணமாக நான் சென்ற ஊர்.. நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேவாலா மற்றும் பந்தலூர் மற்றும் சேரம்பாடி மற்றும் கூடலூர். மற்றும் அதனை சுற்றியுள்ள ஊர்கள்.. இந்த ஊர்களை பற்றி நம்மில் எத்தனை பேருக்கு தெரியும். இந்த இடங்கள் தமிழ்நாட்டிலேயே மிக மிக அதிகமாக மழை பெய்ய கூடிய இடங்கள் ஆகும். ஆனால் இது சந்தோசமான செய்தியாக இருந்தாலும். வருத்தமான செய்தி என்னவென்றால். .இங்கு பெய்யும் அனைத்து மழை நீரும் கேரளாவுக்கு செல்கின்றன. இதனால் நமக்கு எந்த ஒரு பயனும் இல்லை. இங்கு பெய்யும் மழை நீரை சேகரித்து வைத்தாலே நமது தமிழ்நாட்டிற்கு மட்டும் இல்லாமல் அண்டை மாநிலத்திற்கும் தண்ணீர் அளிக்கலாம். .அதற்கு முக்கிய தேவை அரசின் உதவி. இங்கு பெய்யும் மழை நீரை தடுத்து நிறுத்த ஒரு தடுப்பணை கூட இங்கு இல்லை. ..அரசு இங்கு தடுப்பணை கட்டி உதவி செய்தால் தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் தண்ணீர் வழங்கலாம்.அரசின் உதவிக்கு மக்களின் பங்களிப்பு மிக மிக முக்கியம் முடிந்தவரை இந்த தகவலை மற்றவர்களுக்கு பகிருங்கள். ....செய்திகளுக்காக காவல்துறை. நண்பன் செல்வா.




**பிளம்பிங் வேலைகள்,
கம்ப்ரஸ்ஸர் கிளினிங், ஸ்லோரிக்,
போர்வெல், போன்ற வேலைகளும்,
மெட்டிரியல் மற்றும் லேபர் காண்ட்ராக்ட்
முறையில் தரமானதாக
சிறந்த முறையில் செய்து தரப்படும்.**



தொடர்புக்கு

**S. ஏழுமலை**

லேபர் காண்ட்ராக்டர்
எண்.87/1, திருவீதி அம்மன் கோவில் தெரு,
கொளத்தூர், சென்னை – 600 099.

**செல்**

**98411 38706**

**94442 95496**



# சிந்தனை முத்துக்கள்..!

## அதுதான் காரணம்

தி.மு.க. தலைவர் கருணாநிதியை கடுமையாக விமர்சிக்கும் மூன்று பெண்கள்...

1) பிரேமலதா விஜயகாந்த்,
2) சசிகலா நடராஜன்,
3) தமிழிசை சௌந்தர்ராஜன் இந்த மூன்று பேர் கல்யாணத்தையும் நடத்திவைத்தவர் கருணாநிதி. அதுதான் தமாஷ்.!!!

## அழுகை

ஆங்கிலப் பள்ளியில்
அடிவாங்கும் குழந்தை
அழுகிறது "அம்மா"
என்று தமிழுக்கே
உண்டான
தனிச்சிறப்பு

## நகைக் கடைக்காரன்

பர்ஸ்சுல இருக்கிற
பணத்தை எல்லாம்
புடுங்கிட்டு புதுசா
இன்னொரு காலி பர்ச
கிப்டாகக் கொடுத்து
வெறுப்பேத்துரான்

## தமிழன்டா

இந்தி பேசுறவன்
பானி பூரி விக்கிறான்...
தமிழ் பேசுறவன்
உலகமே வியக்கும்
கூகுலின்
அதிகாரி..!

## சீமான்

உண்மை, நேர்மை
எங்கிருக்கிறதோ அங்கு
மக்கள் தானாக
வருவார்கள்.

## அவமானம்

ஊருக்கே சோறு போடும் உழவன் மட்டும்தான்...
இன்று ஒரு ரூபாய் அரிசிக்கு நின்று கொண்டிருக்கிறான் ரேசன் கடைகளில்

## ஆசிரியர் பஞ்ச்

எம்.எல்.ஏக்கள் கூட சில
கோடிக்குதான் விலை போறாங்க...
ஆனா ஓட்டு போட்ட
மக்கள் தான் பாவம் சில
நூறுக்கே விலை போறாங்க...

## ஆ.தே.முருகையன் பஞ்ச்

மரம் கூட காற்றடித்தால்
அசைந்தாடுகிறது... மனிதா !
நீ எதற்கும் அசையாமல் நிற்கிறாயே..?
சோறு போட்டவன்
செத்துக் கொண்டிருக்கிறான்...
மனிதா...! உனக்கு
மானுடம் மறந்துபோச்சா? உன்
மனித நேயம் என்ன இறந்துபோச்சா?

## ஆதார் இல்லா மனிதன்

மக்கள் :
அண்ணே ரோட்டுல ரெண்டு பேர்
அடிபட்டு கெடக்காணுங்கனே
மத்திய அரசு :
ஆதார் அட்டை இருந்தா
அவன வண்டியில ஏத்து..
இல்லைனா வண்டியை
அவன் மேல ஏத்து...

## கண்ணீர்

விவசாயம் எப்படி அழிஞ்சிருச்சினு
சீக்கிரம் பாடபுத்தகத்திலே வந்திடும்...
ஆனா அதைப் படிக்க ஒரு மனுஷங்கூட
அதுவரைக்கும்உ யிரோட
இருக்க மாட்டான்.

## எமனுக்கு எமன்

ஏண்டா நானே உங்களைப் பிடிக்க எருமை
மாட்டு மேலே ஏறிகினு மெதுவாத்தானே வரேன்...
அதுக்குள்ளே நீங்களே ஏண்டா புதுசு புதுசா வண்டிய
வாங்கிகினு வேகமா வந்து எங்கிட்டே மாட்டுறீங்க?

## செல்ஃபி

செல்ஃபி புகைப்படம்
மோகம் கொண்டவர்களுக்கு
ஓர் வேண்டுகோள்
மரம் நடுவதை போல்
எடுத்து பதிவிடுங்கள்
உங்களைப் பார்த்து பலரும்
செல்ஃபி எடுப்பதற்காகவே மரம்
நடுவதற்கு வாய்ப்புள்ளது.



# உலகத் தமிழ் இணைய மாநாடு

## உங்கள் கட்டுரைகளை சமர்ப்பிக்கத் தயாரா?

16-வது உலகத் தமிழிணைய மாநாட்டை வரும் ஆகஸ்டு மாதம் 25, 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் கனடாவின் தொராண்டோ நகரில் நடத்தவுள்ளதாக உத்தமம் அமைப்பு தெரிவித்துள்ளது. இம்மாநாட்டுக்கான கருப்பொருளாக ஆழ்த்தமிழின் அழகும் ஆழக்கற்றல் திறனும் (Deep Learning) என்பதும், தமிழில் தரவு அறிவியல் (Data Science) ஆகியவை அறிவிக்கப்பட்டுள்ளன.

உத்தமம் என்னும் உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றமானது அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் ஒரு தன்னார்வப் பன்னாட்டு நிறுவனம் ஆகும். உலகமெங்கும் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ்த் தொழில் முனைவோர், தமிழ்க் கணினியாளர்கள், நிரலர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரை ஒருங்கிணைப்பதை தனது முதன்மையான நோக்கமாக இது கொண்டுள்ளது.

உலகில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் நாடுகளான இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கடந்த 15 ஆண்டுகளாக இம்மன்றத்தின் சார்பில் ஆய்வரங்கம், கருத்தரங்கம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய உலகத் தமிழிணைய மாநாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இந்நிலையில் 16-வது உலகத் தமிழிணைய மாநாட்டை முதல் முறையாக கனடாவின் தொராண்டோ நகரில்வரும் ஆகஸ்டு மாதம் 25, 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் வாட்டர்லூ பல்கலைக்கழக பேராசிரியர் செல்வக்குமார் மற்றும் கூகுள் நிறுவனத்தின் கனடா கிளையில் பணியாற்றுபவரான செந்தூரன் ஆகியோரின் முயற்சியால் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




இதுகுறித்து சென்னையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது பேசிய உத்தமம் அமைப்பின் செயல் இயக்குநர் இனிய நேரு அவர்கள்,

"இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழும் வரலாற்று சிறப்புமிக்க தொராண்டோ நகரில் முதல் முறையாக நடைபெறவிருக்கும் தமிழிணைய மாநாட்டின் ஆய்வரங்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகளை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் புத்தகமாக வெளியிடவுள்ளதாகவும், மேலும் தமிழ் மொழியில் பயன்பாட்டில் உள்ள பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்த செயல்முறை விளக்கங்கள் அளிக்கவும் மாநாட்டில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும்" அவர் தெரிவித்தார்.

தொராண்டோ பல்கலைக்கழகத்தின் ஸ்கார்பரோ வளாகத்தில், மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியாளர்கள் நிறுவனத்தினுடைய (IEEE) கனடா கிளையின் ஆதரவோடு நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் கருப்பொருளாக ஆழ்த்தமிழின் அழகும் ஆழக்கற்றல் திறனும் (Deep Learning) என்பதும், தமிழில் தரவு அறிவியல் (Data Science) ஆகியவை முடிவு செய்யப்பட்டுள்ளன

இம்மாநாட்டின் முக்கிய பகுதியான ஆய்வரங்கத்தில் பங்கேற்கவிரும்புபவர்கள் தங்களது ஆய்வுக் கட்டுரைகளை மாநாட்டுக் குழு முடிவுசெய்துள்ள 12 தலைப்புகளில் இருந்து ஒன்றை தெரிவு செய்து அதற்கான ஆய்வுச் சுருக்கத்தை வரும் மே 15ம் தேதிக்குள் cpc2017@

infitt.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக தகவலுக்கு http://www.tamilinternetconference.org மற்றும் http://www.infitt.ca என்னும் இணையதள முகவரிகளையும் cpc2017@infitt.org என்னும் மின்னஞ்சல் முகவரியையும் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




இம்மாநாட்டின் தலைவரும் கனடாவிலுள்ள வாட்டர்லூ பல்கலைக்கழக பேராசிரியருமான செல்வக்குமார் அவர்களிடம் இம்மாநாடு குறித்து தொடர்புக்கொண்டு கேட்டபோது, "மொழியைக் கருவியாகக் கொண்டு இயங்கும் மாந்தனுக்குப் போட்டியாக கணினி வளர்ந்து பல துறைகளில் வியப்பூட்டும் வளர்ச்சியை அடைந்துள்ளது.

இதில் தமிழ்மொழிசார் அனைத்து கணினி நுட்பங்களையும் வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, உலகமெங்கும் தமிழ்க் கணினி மற்றும் இணைய வளர்ச்சிக்காக உழைக்கும், உழைக்க நினைக்கும் ஆயிரக் கணக்கான தமிழர்களை இணைக்கும் பாலமாக இந்த மாநாடு அமையுமென்று எதிர்பார்க்கிறோம்" என்றார்.

மேலும் அவர் கூறுகையில், இதுவரை இம்மாநாட்டின் சிறப்பு சொற்பொழிவாளர்களாக மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் செயற்கையறிவுத்திறன் மற்றும் ஆழக்கற்றறிதல் துறையின் தலைமை விஞ்ஞானியான லி டெங் மற்றும் இயந்திர நுண்ணறிவு வல்லுநரான ஆண்ட்ரு கே.சி. வோங் ஆகியோர் தங்களின் வருகையை உறுதிசெய்துள்ளார்கள். மேலும், சில தலைசிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களை அழைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

மாநாட்டின் மற்றொரு பகுதியாக 20க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப பயிற்சிகள்/உதவிகள் வழங்கும் மக்கள் அரங்கமும், 20க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கும் கண்காட்சி அரங்கமும் அமைக்கப்படவுள்ளது. இதை பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாநாட்டிற்கு தகுதியுள்ளதாக தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரையாளர்களுக்கு பல்வேறு பரிசுகள், குறிப்பாக மொத்தம் நான்கு மாணவர்கள் / இளைஞர்களுக்கு பயணப்படியாக 500 கனேடிய டாலர்களும், பெண்களுக்கென சிறப்பு பரிசுகளும் என மொத்தம் 10-க்கும் மேற்பட்ட பரிசுகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

– ரமேஷ்குமார்



2017 ஜூலை-10

பிறந்தநாள் வாழ்த்துகள்...

பசுமை கொண்ட பாரதத்தின்
ஏவுகணையை விட
ஏர் களப்பையே சிறந்தது என்று...
எந்நாளும் சமூகத்திற்காகவே
சிந்திக்கும் சிந்தனைவாதி...
நல்லவன்பாளையத்து நன்மணி
மக்கள் விசாரணையின் பொறுப்பாசிரியர்
கவிஞர் **ஆ.தே.முருகையன்,** அவர்கள்
இன்னும் பல நூறு பிறந்த நாள்
கொண்டாட வாழ்த்துகிறோம்...

**ஆ.மவுரியன்**
ஆசிரியர் மக்கள் விசாரணை
**மற்றும் ஆசிரியர் குழு**




# என்றால் என்ன?

Credit Information Bureau (India) Limited. இது, கடன் பெறுவோர் பற்றிய இந்தியாவின் முதல் தகவல் நிறுவனம். வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள், தங்களிடம் கடன் பெறுவோர் பற்றிய விவரங்களை ஒவ்வொரு மாதமும் (சில வங்கிகள் 60 நாட்களுக்கொரு முறை) சிபில் நிறுவனத்தில் அப்டேட் செய்யும். சிபில் போன்று மேலும் சில அமைப்புகள் இருந்தாலும், வங்கிகள் சிபில் ரேட்டிங்கிற்கே முக்கியத்துவம் தருகின்றன.

**யாருடைய விவரங்கள் சிபிலில் இருக்கும்?**

க்ரெடிட் கார்ட், பர்சனல் லோன், கார் லோன், வீட்டுக் கடன் அல்லது வேறு எந்த வகைக் கடனாவது வங்கிகளிலோ அல்லது வங்கி சாராத தனியார் நிதி நிறுவனங்களிலோ பெற்றுள்ள ஒவ்வொருவர் பற்றியும், சிபில் நிறுவனத்தில் தகவல் இருக்கும்.

**இதனால் என்ன பயன்?**

நீங்கள் க்ரெடிட் கார்ட் அல்லது வேறு வகைக் கடன்களுக்கு விண்ணப்பிக்கும்போது அந்த வங்கி அல்லது நிதி நிறுவனம் உங்கள் விவரங்களை வைத்து சிபில் பதிவுகளை சோதிக்கும். சிபிலில் உங்கள் ஸ்கோர் எவ்வளவு, உங்களின் கடன் விவரங்கள், அவற்றை திருப்பி செலுத்தி இருக்கும் விதம் ஆகியவற்றை பார்த்துவிட்டு உங்களுக்கு க்ரெடிட் கார்ட் அல்லது கடன் கொடுக்கலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்யும். இதன் மூலம் குறிப்பிட்ட நபர்களுக்கு கடன் கொடுத்து, அதை வசூலிக்கும் பிரச்சனையை வங்கிகள் தவிர்க்க முடியும்.

**கடன் பெறுவோர் விவரங்களை சிபில் எப்படிப் பெறுகிறது?**

ரிசர்வ் வங்கி உத்தரவுப்படி, வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் தங்களிடம் கடன் பெறுவோர் குறித்த விவரங்களை தானாகவே சிபில் நிறுவனத்திற்கு அளிக்கும்.

**என்னென்ன தகவல்கள் இடம் பெறும்?**

க்ரெடிட் கார்ட் அல்லது மற்ற வகைக் கடன் பெறுவோரின் தனிப்பட்ட தகவல்கள், கடன் வகை, கடன் தொகை, கடன் செலுத்த வேண்டிய காலம், ஒவ்வொரு மாதமும் சரியாக கடன் செலுத்தி இருக்கிறார்களா அல்லது எத்தனை நாள் தாமதமாக செலுத்தி இருக்கிறார்கள் ஆகிய விவரங்களுடன் கடனை கட்டி முடித்து விட்டார்களா அல்லது செட்டில் மெண்ட் அல்லது வராக்கடன் ஆகியவை பற்றிய தகவல்களுல் இடம் பெறும்.

**ஸ்கோர் எவ்வளவு இருந்தால் கடன் கிடைக்கும்?**

சிபில் ஸ்கோர் *300* முதல் *900* வரை இருக்கும். பொதுவாக 750க்கும் மேல் சிபில் ஸ்கோர் இருப்பவர்களுக்கு எளிதில் கடன் கிடைக்கும். வட்டியும் குறைவாக இருக்கும். 750க்கும் கீழ் ஸ்கோர் இருப்பவர்களுக்கு கடன் கிடைப்பது கடினம். மேலும் அப்படியே கொடுத்தாலும் வட்டி அதிக அளவில் இருக்கும்.

**சிபில் ஸ்கோர் தெரிந்துக் கொள்வது எப்படி?**

சிபில் இணையதளத்திற்கு சென்று தெரிந்துக் கொள்ளலாம். ஆண்டிற்கு ஒரு முறை

இலவசமாக பார்த்துக் கொள்ளலாம். மேலும் பார்க்க ஒவ்வொரு முறையும் ரூ.550 செலுத்த வேண்டியிருக்கும். எத்தனை முறை வேண்டு மானாலும் பார்த்துக் கொள்ளலாம். இதில் உங்கள் கடன் பற்றிய அனைத்து விவரங்களை யும் தெரிந்துக் கொள்ளலாம். விவரங்கள் சரியாக இருக்கின்றனவா என்றும் பார்த்துக் கொள்ளலாம்.

### தவறான விவரங்கள் இருந்தால் எப்படி சரி செய்வது?

சிபில் நிறுவனம் உங்கள் விவரங்களில் எந்த மாறுதலையும் செய்யாது. முறையான ஆவணங்களுடன் நீங்கள் கடன் பெற்றிருக்கும் வங்கி அல்லது நிதி நிறுவனத்தை அணுகி சரி செய்துக் கொள்ளலாம். உங்கள் வங்கி, சிபில் ரிப்போர்ட்டில் தவறுகளை சரி செய்துவிடும்.

### சிபில் ஸ்கோர் குறைவதற்கான காரணங்கள் என்ன?

க்ரெடிட் கார்ட் அல்லது பிற வகைக் கடன் களுக்கான தவணைத் தொகையை சரியான நேரத்தில் முழுமையாக செலுத்தாமல் இருப்பது, கடன் அட்டையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் க்ரெடிட் லிமிட்டில் 50 சதவிகிதத்திற்கும் மேல் பயன்படுத்துவது, வங்கிகளில் கடன் கேட்டு அடிக்கடி விண்ணப்பிப்பது, சரியாக கடனை திருப்பிச் செலுத்தாதவருக்கு ஜாமீன் கையெழுத்துப் போடுவது ஆகியவை உங்கள் சிபில் ஸ்கோரை குறைத்துவிடும்.

### கடன் கேட்டு விண்ணப்பிப்பது கூட ஸ்கோரை குறைக்குமா?

ஆமாம். நீங்கள் ஒவ்வொருமுறை க்ரெடிட் கார்ட் அல்லது கடனிற்கு விண்ணப்பிக்கும் போதும், சிபிலில் உங்களைப் பற்றிய விவரங்கள் அந்த வங்கியால் பார்க்கப்படும். அப்படி அடிக்கடி பார்க்கப்படுவது எதிர்மறையாக கருதப்படும். ஆண்டிற்கு 2 முறைக்கும் மேல் கடனிற்காக விண்ணப்பிக்க வேண்டாம். ஒவ்வொரு முறை உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் போதும் அடுத்த வங்கி உங்களுக்கு கடன் கொடுக்க தயங்கும்.

### சிபில் ஸ்கோர் உயர்த்துவது எப்படி?

இதுவரை கடன் பெறாதவர் என்றால், உங்கள் வருமானத்தின் அடிப்படையில் க்ரெடிட் கார்ட் அல்லது சிறிய தொகையில் கடன் பெற்று அதைச் சரியாக திருப்பிச் செலுத்துங்கள்.

ஏற்கனவே வாங்கிய கடன்களில் நிலுவைத் தொகை இருந்தால் அதை முழுமையாக செலுத்தி விடுங்கள். குறைவான சிபில் ஸ்கோர் இருப்பவர்களுக்கும் சில தனியார் நிதி நிறுவனங்கள் சிறிய அளவில் கடன் கொடுக் கின்றன. வட்டி சற்றுக் கூடுதலாகத்தான் இருக்கும். அவர்களிடம் கடன் பெற்று தாமத மில்லாமல் சரியாக மாதத் தவணையைக் கட்ட வேண்டும். நகைக்கடன் போன்றவையும் இதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

பெரும்பாலான வங்கிகள், தங்களிடம் பிக்சட் டெபாசிட் வைத்திருப்பவர்களுக்கு, அதை உத்தரவாதமாக வைத்துக் கொண்டு பிக்சட் டெபாசிட் தொகையில் 70 சதவிகிதம் வரை க்ரெடிட் லிமிட் வைத்து க்ரெடிட் கார்டு களை தருகின்றன. ஒவ்வொரு மாதமும் மிகக் குறைந்த அளவு செலவளித்து அதை சரியாக திருப்பிச் செலுத்துவதன் மூலம் சிபில் ஸ்கோரை உயர்த்தலாம். எந்தக் காரணம் கொண்டும் இதிலும் தாமதமாக மாதத் தவணைக் கட்டக் கூடாது.

அடமானக் கடன் மற்றும் அடமானமற்றக் கடன் என்ற கலவையில் கடன் பெற்று அதை முறையாக திருப்பிச் செலுத்துவதன் மூலமும் சிபில் ஸ்கோரை எளிதில் அதிகரிக்கலாம்.

### நம் சிபில் ஸ்கோரை நாம் அடிக்கடிப் பார்ப்பதால் ஸ்கோர் குறையுமா?

குறையாது. அவ்வப்போது சிபில் ஸ்கோர் பார்த்துவிடுவது நல்ல பழக்கமே. அப்போது தான் தவறுகள் ஏதும் இருந்தால் அதை வங்கியில் சொல்லி திருத்திக் கொள்ளலாம். சில நேரங்களில் அடுத்தவர் கடனெல்லாம் நம் கணக்கில் வைத்துவிடுவார்கள். அது, நம் க்ரெடிட் ஸ்கோரை வெகுவாக பாதிக்கலாம்.

**சில வங்கிகள், சிபில் ஸ்கோர் அடிப்படையில் வீட்டுக் கடன் போன்ற கடனுக்கான வட்டியை நிர்ணயிக் கின்றன. எனவே உங்கள் சிபில் ஸ்கோர் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.**

– பாலகிருஷ்ணன்

# ரஜினியுடன் இணையும் விஜய்



ரஜினி அரசியலுக்கு வரமாட்டார். ரஜினி அரசியலுக்கு வருவது நல்லதல்ல. ரஜினி அரசியலுக்கு வந்தால் மக்கள் ஆதரிக்க மாட்டார்கள்; தோற்றுவிடுவார். ரஜினி அரசியலுக்கு வருவது நல்லதல்ல. ரஜினி அரசியலுக்கு வரவே கூடாது!

இப்படியெல்லாம் வாத, பிரதிவாதங்கள் தமிழ் கூறும் நல்லுலகில் கடந்த சில மாதங்களாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த வாதத்தில் கம்யூனிஸ்டுகள், மார்க்சிஸ்டுகள், திமுக, அதிமுகவினர் என யாரும் விதிவிலக்கல்ல. காங்கிரஸ் கொஞ்சம் அமைதி காக்கிறது. பாஜக ரஜினியை வா, வா என்று தொடர்ந்து அழைத்துக் கொண்டே இருக்கிறது.

இதையெல்லாம் தாண்டி அரசியல் தலைவர்களில் திருமாவளவன் மட்டும் அவர் வருவதை ஆதரித்துப் பேசியிருக்கிறார். அரசியல் அறிவு ஜீவி என்று சொல்லத்தக்க குழுவில் முன்னணி வகிக்கும் தமிழருவி மணியன் ரஜினியை சந்தித்து விட்டு வந்து ரஜினியின் அரசியல் ஊதுகுழலாகவே மாறியிருக்கிறார். சிஸ்டம் கெட்டுப்போச்சு, போர் வரட்டும் பார்த்துக்கலாம் என்ற இரண்டு அரசியல் பஞ்ச் டயலாக் மட்டும் பேசிய ரஜினிக்கு கிடைத்த அரசியல் அங்கீகாரம் இவையெல்லாம் என்பது ஒரு பக்கம் ஆச்சரியம்.

இன்னொரு பக்கம் இந்த பஞ்ச் டயலாக் பேசிவிட்டு 'காலா' படப்பிடிப்புக்குப் போன ரஜினியை இடையில் வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் பத்திரிகையாளர்கள் வாயைக் கிளறினார்கள். முதலில், 'இப்போதைக்கு அரசியல் பேசும் ஐடியா இல்லை' என்றார்.

கட்சி ஆரம்பிப்பீர்களா என்றபோது,

# விஜய் தளபதியா? இளைய தளபதியா?

விஜய் படத்தின் தலைப்பு ஃபர்ஸ்ட் லுக் போஸ்டருடன் வெளியாகி அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

அனைவரும் ஆவலுடன் எதிர்பாத்து காத்துக் கொண்டிருந்த விஜய் படத்தின் தலைப்பு வெளியானது. அட்லி இயக்கத்தில் விஜய் தன்னுடைய 61வது படத்தில் விறுவிறுப்பாக நடித்து வருகிறார். இதில், அவருக்கு ஜோடியாக காஜல் அகர்வால், சமந்தா மற்றும் நித்யா மேனன் ஆகியோர் பலர் நடிக்கின்றனர்.

இந்நிலையில், விஜய் தன்னுடைய 43வது பிறந்த நாளை கொண்டாடினார். இதனை முன்னிட்டு விஜய் 61-வது படத்தின் தலைப்பு வெளியானது. மெர்சல் என்று தலைப்பு வைத்துள்ள படக்குழுவினர், இளைய தளபதி விஜய் என்பதற்கு பதிலாக தளபதி என்று ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரில் போட்டதால் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது இந்த போஸ்டர்.

காரணம், தமிழக அரசியலில் திமுக செயல் தலைவர் மு.க.ஸ்டாலினை தளபதி என்று தான் அனைவரும் அழைப்பார்கள். அப்படியிருக்கும் போது, தளபதி என்று விஜய்யை குறிப்பிட்டதால் தமிழக அரியலில் பெரும் சர்ச்சை கலந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

முன்னதாக பல கட்சி வண்ணங்களை வைத்து விஜய் ரசிகர்கள் போஸ்டர் ஒட்டியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அதே போல், விஜய்யின் தந்தையும், விஜய் அரசியலுக்கு வருவது குறித்து அவர் தான் முடிவு செய்யவேண்டும் என்று குறிப் பிட்டிருந்தார். கடந்த சில வாரங்களுக்கு முன், விவசாயிகள் பிரச்சனை குறித்து பேசியிருந்தார். இதெல்லாம் வைத்து பார்க்கையில், விஜய்க்கு அரசியல் வரும் எண்ணம் இருக்கிறது போன்று தோன்றுகிறது.

இந்த தளபதி என்ற பட்டம், சூப்பர்ஸ்டார் நடித்த தளபதி என்ற படத்தையும் ஞாபகப்படுத்துகிறது. ஏற்கனவே ரஜினி அரசியலுக்கு வருவது பற்றிய சர்ச்சை எழுந்து வரும் நிலையில், தற்போது விஜய்யின் மெர்சல் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் ஒரு பக்கம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றாலும், அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது

'தேர்தல் வரட்டும்!;' என்றார்.

ரசிகர்களை சந்திப்பதில் அவருடைய படம் ஓட வேண்டிய பிசினஸ் இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், அரசியல் தலைகள் எல்லாம் சந்திப்பதில் என்ன இருக்கிறது. பிரதமர், முதல்வர், வேறு நாட்டு ஜனாதிபதி போன்றவர்கள் சந்திப்பதில் கூட வருமான வரி, வெளிநாட்டில் பிசினஸ் விவகாரங்கள் இருக்கலாம். சின்ன கட்சிகளும், அறிவு ஜீவி என்று சொல்லிக் கொள்ளும் அரசியல்வாதிகளும், நக்மா, கஸ்தூரி போன்ற நடிகைகளும் இவரை சந்தித்து விட்டு வந்து வெளியில் அரசியல் பேசுவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்?

இதுதான் ரஜினியின் புதுமாதிரி அரசியல். இத்தனை அசுர சக்திகள் வந்து சந்திக்கும் போதும், அவர்களை சந்திக்க சம்மதம் தெரிவித்து வரச்சொன்ன போதும் எதையுமே வெளியில் பேசாமல் இருப்பதற்கு ஒரு ஆற்றல் வேண்டும். வேறொருவராக இருந்தால் இப்படியிருப் பார்களா? அஜித் இல்லையா, கமல் இல்லையா என்று நடிகர்களை கை நீட்டலாம். அவர்கள் எல்லாம் இப்படி ஒரு வித அமுக்கமான அரசியலில் ஈடுபடவில்லையே. இப்போது காமராஜரிலிருந்து ஆரம்பியுங்கள்.

அண்ணாதுரை, கருணாநிதி, எம்.ஜி.ஆர், வி.என். ஜானகி, ஜெயலலிதா, பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிசாமி, ஸ்டாலின், விஜயகாந்த், வைகோ.. யாராகினும் அரசியலை வெளிப்படையாக பேசாமல் இருந் திருக்கிறார்களா? அதையும் மீறி ஒற்றை வார்த்தையை மட்டும் கொளுத்திப் போட்டு விட்டு இமயமலைக்கோ, 'காலா' படப்பிடிப்பிற்கோ சாவகாசமாக ஓடிப்போயிருக்கிறார்களா? எதுவுமே நடக்காதது போல் அங்கே தானுண்டு தன் வேலையுண்டு என்று ஈடுபட்டிருக் கிறார்களா? கிடையவே கிடையாது.

> **விஜய் ரசிகர்களையும், ரஜினி ரசிகர்களையும் இணைத்து அரசியல் களம் காண தயாராகி வருவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். ஒரு பக்கம் விஜய்–ரஜினியை இணைப்பதற்கு பா.ஜ.க. களம் இறங்கியுள்ளது.**

இமயமலைக்குப் போனால் பயந்து ஓடிட்டார். 'காலா' படப்பிடிப்புக்கு போய் விட்டால் பணம்தான் குறி. ரசிகர்களை சந்திக்க ஏற்பாடு செய்தால் பிசினஸ் நடக்க வேண்டும் என்றெல்லாம் ரஜினிக்கு உள் நோக்கம் கற்பிப்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் ரஜினிக்கு ஒன்றுமே தெரியாது அரசியல்னா பயம். பணம் சம்பாதிக்கிறதிலேயே குறியாக இருப்பவர், எப்படி கட்சி ஆரம்பித்து பணத்தை இழப் பதற்கு சம்மதிப்பார். நெவர் என்று வாதிடுவது வாடிக்கை யாகிப்போனது.

ஒருவர் பேசி எதிராளி பேசாதிருந்தால் ஒருவர் பேசியதற்கு எதிராளி சம்மதித்தார் என்று பொருள். அதை மௌனம் சம்மதம் என்றும் நம் மொழிப் பண்பாட்டில் அர்த்தப் படுத்துவார்கள்.

ஆக, ரஜினி பேசாமலே இருக்கிறார்; மற்றவர்கள் பேசிக் கொண்டே இருக்கிறார் கள். அப்படியானால் மற்றவர்கள் பேசுவதில் ரஜினிக்கு சம்மதம் என்று அர்த்தமா? அப்படித் தான் பலர் நினைத்துக் கொள்கிறார்கள். இதன் வெளிப்பாடு ரஜினிக்கு நடிப்பதை தவிர, ஸ்டைல் செய்வதை தவிர ஒன்றுமே தெரியாது என்ற எண்ணத்தை உருவாக்கி விடுகிறது. உடனே அவருக்கு ஆளாளுக்கு அட்வைஸ் மழையாகப் பொழிந்து தள்ளிவிடுகிறார்கள். கடந்த 1996 தொடங்கி செய்தித்தாள்கள் வரை ரஜினி பேசுபொருளான காலங்களில் என்ன நடந்திருக்கிறது என்று எடுத்துப் பாருங்கள். அரசியல் ரஜினிக்கு 10 அட்வைஸ், தொடங்கி 100 யோசனைகள் வரைக்கும் சொல்லியிருப் பார்கள்.

கருணாநிதி நெகட்டிவ் என்றால் ஜெயலலிதா பாசிட்டிவ். ஜெயலலிதா நெகட்டிவ் என்றால் கருணாநிதி பாசிட்டிவ். இவர்கள் தவிர்த்து மாற்று ஒருவரை ஏன் ஏகோபித்த ஜனங்கள் நினைவில் நிறுத்த வில்லை. அரசியல் பலம், பண பலம், செல்வாக்கு பலம். அரசியலில் ஈடுபட்டு ஆட்சியைப் பிடிப்பதற்கு இந்த மூன்றில் எது முக்கியம்? மூன்றும் முக்கியம்தான்.

ஆனால் மேற்சொன்ன தலைவர்களுக்கு முதலில் வந்தது எது? செல்வாக்கு பலம் தானே? பிறகு அரசியல் பலம்? கடைசி யாகவே பணபலம் வந்தது என்றால் ஒப்புக் கொள்வீர்களா?

எம்ஜிஆரை எடுத்துக் கொள்ளுங்கள். அவருக்கு திரைத்துறை செல்வாக்கே முக்கிய அங்கம் வகித்தது. அத்துடன் திமுகவில் ஈடுபட்டதன் அரசியல் செல்வாக்கு துணை நின்றது. இரண்டும் கூடி கனிந்தபோது தனிக் கட்சி ஆரம்பித்தார். அதீதமான தனிமனித செல்வாக்கு, அதீதமான அரசியல் செல்வாக்கு பார்த்து தமிழகத்தின் தனிமனிதர்கள் கட்சி நிதியை நேரடியாகவும் மறைமுகமாகவும் கொண்டு வந்து எம்ஜிஆருக்கு கொட்டினார் கள். அதை தேர்தல் செலவுக்கு பயன்படுத் தினார்.

அதே சமயம் இவருக்கு இணையான அரசியல் பலத்துடன் இருந்த காங்கிரஸ், திமுக கட்சி தலைவர்களுக்கும் நிதி கொடுக்க வேண்டிய கட்டாயம் தொழிலதிபர்களுக்கு இருந்ததுதான். ஆனால் மக்கள் செல்வாக்கு யாருக்கு என்று பார்த்தே நிதி கொடுப்பதை கூட்டவும் குறைக்கவும் செய்தனர் அவர்கள். இன்றைக்கும் ஒரு தொழிலதிபர் பெரிய கட்சி, அதற்கடுத்த கட்சி, சின்ன கட்சி, கடைகோடிக் கட்சி பார்த்தே நிதி அளவை அளக்கிறார் என்பது அரசியலில் உள்ளவர்கள் எல்லோருக்கும் தெரியும்.

**– மவுரியன்**



மதுரை மாவட்டம், வாடிப்பட்டியில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை கால்நடை சந்தை நடைபெறும். இச்சந்தையில் தென்மாவட்டங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்படும். பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கேரள மாநிலத்தை சேர்ந்த ஏராளமான மாட்டிறைச்சி வியாபாரிகள் சந்தையில் மாடுகளை வாங்கி செல்வர். ரூ.50 லட்சம் அளவில் வர்த்தகம் நடைபெறும். மத்திய அரசு இறைச்சிக்காக மாடுகளை விற்க தடை விதித்ததன் எதிரொலியாக, வாடிப்பட்டி கால்நடை சந்தைக்கு நேற்றுமுன்தினம் போதிய மாடுகள் வரவில்லை.

குறைந்த அளவிலே மாடுகள் கொண்டு வரப்பட்டன. இதனால், வழக்கமாக காலை 6 மணி முதலே பரபரப்பாக காணப்படும் வாடிப்பட்டி சந்தை, நேற்றுமுன்தினம் மாட்டு வியாபாரிகள், தரகர்கள் மற்றும் விவசாயிகளின்றி வெறிச்சோடி காணப்பட்டது. வியாபாரி மதுரை காசிராஜன் கூறுகையில், 'மத்திய அரசின் தடையால் சந்தைக்கு வெறும் 50 மாடுகளே வந்தன. வயதான மாடுகளை விற்று, இளம் மாடுகளை வாங்கவும் வழியில்லாமல் போய் விட்டது.

இதனால் மாட்டு வியாபாரிகள், தரகர்கள், மாட்டிறைச்சி வியாபாரிகள், விவசாயிகள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். பள்ளி மற்றும் கல்லூரி சேர்க்கை நேரத்தில், விவசாயிகள் கால்நடைகளை விற்று தங்கள் குழந்தைகளுக்கான கல்வி செலவை கட்ட எண்ணியிருந்த நேரத்தில், மத்திய அரசின் இந்த சட்டம் அவர்களையும் வெகுவாக பாதித்துள்ளது' என்றார்.



# வாடிப்போன மாட்டுச் சந்தை

- இர்வீன்

# கருநிற காக்கிகள்

ஆ.மலுரியன்

12

**துப்பாக்கியில் இருந்த அனைத்து குண்டுகளையும் அப்துல் ரஷீத் உடல் மீது ஜல்லடையாய் துளைத்துக் கொண்டிருந்தது. அப்பொழுது அங்கு பத்துக்கு மேற்பட்ட போலீஸ் வாகனம், வந்து கொண்டிருந்தது.**

பெரம்பூர் பென்னி மில் அருகே ஒரு பாழடைந்த இரும்பு குடோன் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. அதில் உள்ள ஒரு இருட்டறையில் ஒரே ஒரு ஆலஜின் லைட் மட்டும் பிரமாண்டாக எரிந்துக் கொண்டிருந்தது. பழுதடைந்த இயந்திர உதிரி பாகங்கள் ஆங்காங்கே குவியல் குவியலாக கிடந்தது. ஒரு இரும்பு ப வடிவ கம்பத்தில் ராஜசேகர் தலை கீழாக கட்டி தொங்க விடப்பட்டிருந்தான். அப்பொழுது போலீஸ் அதிகாரி அங்கு வந்து கொண்டிருந்தார். முரட்டு ஜிம் பாய்ஸ் 6 பேர் உருட்டு கட்டைகளை தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

கேமராவை ஒருவன் ப்ரேம் போக்கஸ் செய்து கொண்டிருந்தான் போலீஸ் அதிகாரி அந்த அறைக்கு வந்தவுடன் ஜிம் பாய்ஸ் ராஜசேகரை அடிக்க தொடங்கினார்கள். ராஜசேகரனின் எலும்பு தூள் தூளாகும் அளவிற்கு அடித்துக் கொண்டிருந்தார்கள். ராஜசேகரின் வாயிலும் மூக்கிலும் ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. கேமராவில் படம் பிடித்ததை தாண்டவப் பிள்ளை நேரடியாக தனது லேப்டாப் பார்த்து சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தான். தாண்டவப் பிள்ளை போலீஸ் அதிகாரிக்கு போன் செய்து ராஜசேகரை பையன் கதையை முடிச்சிட்டு ரயில்வே டிராக்ல போட்டுடுங்க, ரயில்ல பாய்ஞ்சு தற்கொலை பண்ணக்கிட்டான்னு பைலை க்ளோஸ் பண்ணுங்க என்ன புரியதா?

ஓகே சார் என்று அதிகாரி சொன்னார். தாண்டவப்பிள்ளை பதட்டத்தில் தனது போனை ஆப் செய்துவிட்ட நிலையில் அவருடன் இருக்கும் அடியாட்களிடம் இந்த போலீஸ்காரங்களையே நம்ப முடியாது நம்ம டீல் முடிஞ்சதும் கண்டெய்னரை விட்டு போலீஸ் காரங்கள வச்சி அவங்கள போலீஸ் ஜீப்பை நசுக்கிடுங்க புரியுதா? என்று சொன்னான் தாண்டவப்பிள்ளை

ஓகே பாஸ் என்று அடியாட்கள் உத்தரவுக்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள். போனைக் கட் பண்ணாமல் இருந்த போலீஸ் அதிகாரி அதிர்ச்சி ஆனார். ராஜசேகர் சொன்னது சரி என்று மனதுக்குள் தோன்றியது. ஆம்பலால் சேட் ராஜசேகரை அடிக்கும் காட்சிகளைவெப் கேமரா மூலம், தொலைக்காட்சிக்கு அனுப்பிக் கொண்டிருந்தான்.

ஒருபுறம் தாண்டவனுக்கு ஆகாத தொலைக்காட்சிகள் ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. தாண்டவன் பேசிய விவரம் லேப் டாப்பில் அவர் பார்த்து சிரிப்பது போலீஸ் அதிகாரியை கொலை செய்ய அடி ஆட்களிடம் பேசுவது எல்லாம் எடிட் டிங்க செய்து சேனலுக்கு அனுப்ப நாடே காட்டு தீயாய் பரவியது.

கௌரி டிவியில் பார்த்து பதறி

போனாள், தன்னைப் பார்த்து பேசிய குற்றத்தற்காக ஒருத்தனை கொலை செயயும் அளவிற்கு தனது அப்பா போவார் என்று சற்றும் கௌரி எதிர்பார்க்கவில்லை.

உடனே திவ்யாவிற்கு போன் செய்தாள் "டீவியை பார்த்தியா? என்று கேட்டாள்? பார்த்துக் கொண்டிருக்கிறேன் ராஜசேகரின் உயிருக்கு ஆபத்து, உடனே காப்பாத்த உடனே புறப்பட்டு வா என்று சொன்னாள். திவ்யாவிற்கு சந்தோஷம் தாங்க முடிய வில்லை. தனது அப்பா ஆம்பலால் சேட்டிடம் விஷயத்தை சொன்னாள் சேட்டு சந்தோஷத் தில் மிதந்துக் கொண்டிருக்க டெலிபோன் மணி அடித்தது.

எதிர் முனையில் ராஜசேகர் ஒருகோடி பணத்தை எடுத்துக்கிட்டு எல்லாமே புது இரண்டாடியிரம் ரூபா நோட்டா இருக்கணும், பழைய சஃபையர் தியேட்டர் வாசல்ல நிக்கிறேன். சீக்கிரம் வந்திடுங்க, ஒகே ராஜசேகர் உடனே வந்திடுறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு கார் வந்து ஆம்பலால் சேட் வாசலில் வந்து நின்றது துப்பாக்கி முனையில் ஆம்பலால் சேட்டை கண் இமைக்கும் நேரத்தில் கடத்தி விட்டார்கள், திவ்யாவிற்கு ஒண்ணும் புரிய வில்லை.

ராஜசேகருக்கு போன் செய்தாள் நடந்த சம்பவத்தை சொன்னாள், ராஜசேகர் கூலாக நேரா, உங்க ஏரியா போலீஸ் ஸ்டேஷனுக்கு போயி ஒரு கம்ப்ளைண்டு கொடுத்திட்டு நேரா சஃபைர் தியேட்டராண்ட வந்திடு, பைதபை உங்கப்பாகிட்ட சொன்னா பேமண்ட் எடுத்து வச்சிருக்கிறாரா? எஸ், என்றால் அதை ஒரு கோணி பையில போட்டுக் கட்டி ஆட்டோ வுல வச்சிக்கிட்டு வந்திடு, ஒரு நிமிஷம் இன் னிக்கு என்ன சமையல், பிஷ், மட்டன், ஓகே...

அத கிளிண்பண்ண குப்பையை எங்க இருக்கு வீட்டுக்கு பின்னாடி குப்பை தொட்டி யில இருக்கு ஒரு கேரி பேக்கல அந்த கழிவு களை போட்டு அந்த கோணியில ஒரு ஓரமா வச்சிக்கிட்டு வா, இதெல்லாம் எதுக்கு, நான் சொன்னத மட்டும் உடனே ஆட்டோவுல ஏறிக்கொண்டு திவ்யா புறப்பட்டாள்.

அப்பொழுது கௌரி திவ்யாவிற்கு போன் செய்தாள் எங்கயிருக்க என்ற என்று கேட்டாள் மவுண்ட் ரோடு வரைக்கும் போயிட்டு இருக்கேன். நான் உடனே இப்ப உன்னைப் பாக்கனும் ப்ளீஸ், நான் இப்ப உன்ன பாக்க முடியாது. நாளைக்கு மீட் பண்ணிக்கலாம்.. சாரி, என்று போனை கட்பண்ணிட்டு ராஜ சேகரிடம் பேசினாள், நடந்ததை சொன்னாள்.

நீ செய்ஞ்சதுதான் கரெக்ட் சீக்கிரம் வா என்றான் ராஜசேகர். கௌரி தனது காரை நிறுத்திவிட்டு மவுண்ட் ரோட்டில் திவ்யா வரும் ஆட்டோவை பார்த்துக் கொண்டிருந் தாள் கரெக்டாக திவ்வா வரும் ஆட்டோவைப் பார்த்து அங்கிருக்கும் போலீஸ்காரர் நிறுத் தினார். அதில் கௌரியும் ஏறிக்கொண்டாள்.

இப்ப ராஜசேகரை தான பாக்கப்போற நானும் உன் கூட வரேன் என்று சொல்ல திவ்யா அதிர்ச்சியாகிப் போனாள். உடனே நடந்த விஷயத்தை மொபைலில் டைப் செய்து ராஜசேகருக்கு அனுப்பினாள், ராஜகேர் ஒன்றும் புரியவில்லை. கையில் இருந்த சிவப்பு கலர் மையை தலை முகம் முழுக்க ஊத்திக் கொண்டு சட்டைகளை கிழித்துக் கொண்டு பரிதாபமாக நின்று கொண்டிருந்தான்.

தனது தோற்றத்தை படம் எடுத்து திவ்யா விற்கு அனுப்பினான் ராஜசேகர் திவ்யா ராஜ சேகரைப் பார்த்து பதறி அழுதுவிட்டாள். கௌரியும் கண்கலங்கினாள். ஆட்டோவை ஒரு ரெடிமேட் கடைக்கு நிறுத்திவிட்டு ஒரு ஜீன்ஸ், பைஜாமாவை கௌரி வாங்கிக் கொண்டாள், திவ்யாவிற்கு ஒரு புறம் சந்தோஷம் என்றாலும் மறு முனையில் தனது அப்பா கடத்தப்பட்டிருப்பதை நினைத்து அழுது கொண்டிருந்தாள்.

**ராஜசேகரிடம் ஆட்டோ வந்து நின்றது. ராஜசேகரின் இந்த நிலைமையைப் பார்த்து கௌரி பதறிப் போனாள், அழுதாள் கௌரி. எங்க அப்பா இந்த அளவுக்கு மோசமான வராக இருப்பார் என்று நினைக்கல என்று சொன்னாள். ராஜசேகர் வாங்க உடனே போகலாம் என்று ராஜசேகர் சொல்ல ஆட்டோ புறப்பட்டது.**

**– தொடரும்**



# நான் ஒரு பைத்தியக்காரன் ஜனாதிபதி வேட்பாளர்

குடியரசுத் தலைவர் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்துள்ள ஒருவர், நான் ஒரு பைத்தியக்காரன். என்னால் 100 கையெழுத்தைக் கூட வாங்க முடியாது என்று கூறியுள்ளது கலகலப்பை ஏற்படுத்தியுள்ளது.

குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் தொடங்கியுள்ளது. குட்டி குட்டி சுயேச்சைகள் மனு தாக்கல் செய்து வருகின்றனர். அதில் தமிழகத்தைச் சேர்ந்த தேர்தல் மன்னன் கே.பத்மராஜனும் ஒருவர். சேலம் மாவட்டம் மேட்டூரைச் சேர்ந்தவர் பத்மராஜன்.

இந்த தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்துள்ள சில சுயேச்சைகளின் மனுக்கள் கலேபரமாக உள்ளன. மும்பையைச் சேர்ந்த தம்பதி சாய்ரா பானு முகம்மது படேல் மற்றும் முகம்மது படேல் அவர்களில் சிலர்.

**நான் ஜனாதிபதி - என் மனைவி துணை ஜனாதிபதி!**

முகம்மது படேல் தனது வேட்பு மனு குறித்துக் கூறுகையில், நான் ஜனாதிபதியாகவும், எனது மனைவி துணை ஜனாதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதே எங்களது சின்ன ஆசை என்று கூறி ஜெர்க் ஆக வைக்கின்றனர்.



பத்மராஜன்

**தேர்தல் மன்னன் பத்மராஜன்**

இன்னொரு சுவாரஸ்ய வேட்பாளர் தேர்தல் மன்னன் பத்மராஜன். ஒரு தேர்தல் கூட விடாமல் போட்டியிடுவதே இவரது வழக்கம். இதுவரை 178 தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவியுள்ளார். எதிலுமே டெபாசிட்டைத் திரும்பப் பெற்றதில்லை.

**சாதனைக்காக போட்டி**

சேலம் மாவட்டம் மேட்டூரை அடுத்த கோனூர் பகுதியைச் சேர்ந்தவர் பத்மராஜன். இவர் பஞ்சர் கடை வைத்துள்ளார். அதிக முறை தேர்தலில் போட்டியிட்டு, கின்னஸ்

சாதனை படைக்க வேண்டும் என்பதே இவருடைய லட்சியம். இதனால் தமிழகம் மட்டுமின்றி மற்ற மாநிலங் களில் நடைபெறும் தேர்தல் களிலும் அவர் போட்டியிட்டு வருகிறார். மேலும் எப்போது அவர் தேர்தலில் போட்டியிட்டாலும் மக்களிடம் சென்று வாக்கு சேகரிப்பதுமில்லை.

பிரதமர் மோடி, மன்மோகன் சிங், நரசிம்ம ராவ், கருணாநிதி, ஜெயலலிதா , எடியூரப்பா உள்ளிட்ட பல தலைவர்களை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டுள்ளார். கின்னஸ் சாதனைக்காக தேர்தலில் போட்டியிடும் பத்மராஜன் இதுவரை 178 முறை தேர்தலில் போட்டியிட்டுள்ளார். கடைசியாக இவர் ஆர்.கே.நகரில் போட்டியிட்டார்.

கடந்த 1996ம் ஆண்டு , 5 மாநிலங்களில் 8 தொகுதியில் ஒரே நேரத்தில் போட்டியிட்டு பத்மராஜன் வேட்புமனு தாக்கல் செய்தார். இதன் காரணமாகவே, இவரால் தான் ஒரு வேட்பாளர் இரண்டு தொகுதியில் மட்டுமே போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய வேண்டும் என்ற விதிமுறையே கொண்டு வந்தது.

இதேபோல சுயேச்சை வேட்பாளருக்கான டெபாசிட் தொகையும் அதிகரிக்கப் பட்டது. தொடர்ந்து தேர்தலில் தோல்வியடைந்து வரும் பத்மராஜன், அதன் காரணமாகவே லிம்கா சாதனை புத்தகத்தில் 3 முறை இடம்பிடித்தார்.

விஜயபிரகாஷ் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில் சுவாரஸ்யமான வாசகத்தை சேர்த்துள்ளார். அதாவது, என்னைப் போன்ற சாமானியர்களால் 100 கையெழுத்தைக் கூட வாங்க முடியாது. நான் ஒரு பைத்தியம். ஆனால் ஒவ்வொருவரும் என்னைப் போல பைத்தியமாக இருக்க வேண்டும் என்று கூறி கலகலப்பை ஏற்படுத்தியுள்ளார் விஜய பிரகாஷ்.

- குருதேவ்


## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

மேலும் விளம்பரத் தொடர்புக்கு

**மக்கள் விசாரணை** (மாத இதழ்)

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.

**Email : news@makkalvisaranai.com**

போன் : 044 - 4354 2611, செல் : 93821 33334

**MAKKAL VISARANAI, Current A/C. 14920200000953, IFSC Code IOBA0001492, Indian Overseas Bank, K.K. Nagar Branch** என்ற வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தி ரசீதை ஜெராக்ஸ் அனுப்பினால் போதுமானது.

# இனியாவது விழித்துக்கொள்!

- கவிஞர் நிவேதிதா

தும்பை தோர்க்கும் வெள்ளை வேட்டி
இருபுறமும் அட்டகாசமான கறைகள்
இதுதான் கட்சிக்காரர்கள்...

உடுத்தும் உடை மட்டும்தான்
இத்தனை தூய்மை இவர்களிடத்தில் ...
உள்ளத்தில் சுமப்பது
களங்கம் என்ற கறைகள்தான்.!

மக்களை கரை சேர்க்க வந்தவர்கள்...
தன் மக்களை மட்டும்
கரை சேர்க்க வந்தார்கள்!

இவர்கள் ஒருவராவது
வாழ்க்கையில் ஒரு தடவையாவது
ஏரிக் குளங்களை வெட்டினார்களா?
இல்லை தூர் வாரினார்களா? இல்லை
மரக்கன்றுகளையாவது
நட்டார்களா?
பறவைகள், விலங்குகளை
பாதுகாத்தார்களா?

விவசாயம் அழிய, விவசாயி மடிய
துணை போனவர்களே...
லஞ்சம் ஊழல் வார்த்தையை
உச்சரிக்காத நேரமில்லை உங்களுக்கு...

புகை, மது என தீயவைகளை
ஒழித்தவர்களா?
மொழி இனத்திற்காக
சிறை சென்றவர்களா?
நீர், பால், உணவு உடைக்கு
நிரந்தர வழி செய்தவர்களா?
இல்லையே..!

துரோகம் உன்னுள்
தோன்றினாலும்
அது மக்கள் மத்தியில்
தோன்றினாலும்
இழப்பு நாட்டிற்கு மட்டும்தான்.

நீ பார்க்காத ஆயிரமா? லட்சமா?
சில நூறுக்கு ஆசைப்பட்டதால்தான்
ஜனநாயகம் இப்பொழுது
அடிமாடுகளாகிப் போனது

உன் உழைப்பை
நம்பி உன் குடும்பம் நகர
உனக்கு மட்டும்
ஏன் இத்தனை சபல புத்தி?

யார் வேண்டுமானாலும்
உன்னைத் துரத்தலாம்...
யார் வேண்டுமானாலும்
உன்னை வெட்டலாம்...
இனியாவது விழித்துக்கொள்
நெருங்குகிறது ஜனநாயக புரட்சி..
மாற்றம் என்பது வார்த்தையல்ல செயல்..!



லஞ்சமும், ஊழலும் சுகாதார மண் வளம், நிலத்தடி நீர், சுற்றுச்சூழல் ஆகியவற்றை முற்றிலும் அழிக்கப்படுகிறது. மக்களின் உயிரை (அஞ்சாமலும்) விலை கொடுத்து வாங்கும் கார்ப்பரேட் நிறுவனம் ( தனியார் நிறுவனம் )

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பொன்னியம்மன் கோவில் (ஓடை) நடக்கும் அவலங்கள்...

அரசு பால் பண்ணையில் இருந்து வெளி வரும் கழிவுகள் ஓடையில் ஏரியில் நேரடியாக விடப்படுகின்றன. மற்றொரு பக்கம் ஓ.எம். ஆர். மெயின் ரோட்டில் அமைந்துள்ள தனியார் கணினி மென்பொருள் நிறுவனம் கழிவுகளை சாலைக்கு அடியில் அரசு அதிகாரிகளை கைக்குள் வைத்துக் கொண்டு பாதாள குழாய் அமைத்து ஏரியில் விடப்படுகிறது.

தனியாரில் பயன்படுத்தும் அமிலங்கள், பிளாஸ்டிக் கழிவுகள் முற்றிலும் ஏரியில் விடப்படுகிறது. இதன்மூலம் ஏரியில் உள்ள நீர் பரப்பு, கால் நடைகள், விலங்குகள் கூட அருந்த முடியாத விஷ நீராக முற்றிலும் மாற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் மண்ணின் வளம், விவசாயம், மரங்கள் அருகில் உள்ள குடியிருப்புகள் சுமார் 8000 வீடுகள் உள்ளன.

அங்குள்ள இந்த ஏரியில் உள்ள மாசடைந்த நீர் பூமியில் ஊறி கிணறுகளில் உள்ள குடிநீர் மக்கள் பயன்படுத்த முடியாத நீராக மாறுகிறது. சாலையில் பயணிப்போர்களுக்கு ஏரியில் தங்கியிருக்கும் கழிவுநீர் கலந்திருப்பதாக துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு தொண்டை எரிச்சல், மூச் சடைப்பு, மயக்கம் போன்றவை குழந்தை களுக்கும், முதியவர்களுக்கும் பலமுறை ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒன்றுகூடி அரசுக்கும் பலமுறை மனு அளித்தும் பால் பண்ணை கழிவுகளையும், தனியார் நிறுவன கழிவுகளை ஏரியில் விடாமல் நிறுத்துமாறு பலமுறை போராட்டம் செய்தும் அரசு அதிகாரிகளின் அலட்சியப் போக்கால் மக்களின் போராட் டம் அரசிடம் சென்றடையவில்லை.

இன்று பல குழந்தைகள் சுகாதாரமற்ற காற்று, குடிநீர் பயன்படுத்துவதால் சென்னை யின் முக்கிய பகுதியாக இருந்தும் சுகாதாரமற்ற நிலையில் மக்கள் தவித்துக் கொண்டிருக்கும் அவலநிலை நிலவிக் கொண்டிருக்கிறது.





சோழிங்கநல்லூர் ஓடை பகுதியில் இரண்டுமுறை கவுன்சிலராக இருந்த திருமதி. சௌந்தரி அம்மாள் (70) அவர்களிடம் நேரடியாக விசாரித்தபோது அவர்கள் கூறியது நான் பதவியில் இருந்த பொழுது பலமுறை அரசிடம் மனு அளித்தும் மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு அவர்கள் கூறுகின்றார்கள். இதற்கு காரணம் அரசின் அலட்சியம், தனியாரின் பண பலமும் சென்னையில் ஒரு பகுதியை அழிக்கின்றது.

சமூக ஆர்வலர்களின் கருத்து.

குடிநீர், காற்று, நிலம் போன்றவை மிகவும் மாசடைய செய்கின்றன. எந்த நிறுவனமாக ( அரசு மற்றும் தனியார் ) இருந்தாலும் மக்களின் உயிரைப் பாதுகாக்க மக்கள் சென்று அரசிடம் தோற்று லஞ்ச அரசியல்வாதிகளிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு அரசு அதிகாரிகளிடமும் மக்கள் தோற்று விடுகின்றனர்.

இன்று விவசாயத்தை அழித்து விடுகிறோம், நிலத்தையும் நீரையும் அழித்து விடுகிறோம், நாளை எந்த நாயிடம் உணவுக்காகவும் சுத்த மான காற்றுக்காகவும் கையேந்தப் போகிறே ாம். பிறக்கும் குழந்தைகள் கூட மூளை வளர்ச்சி குறைவாகவும், உணவு வளம் தட்டுப்பாடு இருந்தால் நாட்டின் முதுகெலும்பையும் லஞ்சம் என்னும் கத்தியைக் கொண்டு நாட்டின் விவசாய முதுகெலும்பை நொறுக்கி லஞ்சம் என்னும் தீர்ப்பு நிலையாக நின்று விடும். மக்களின் அழிவுதான் இதன் இறுதி முடிவு.

விவசாயம், இயற்கை வளம், ஒவ்வொன்று மனிதனுக்கும் உயிர் மூச்சாய் நினைத்து நாட்டின் விவசாயத்தை பாதுகாத்தால் உணவின் தட்டுப்பாடு ஆரோக்கியமான வாழ்வு என்றுமே நிலைத்து இருக்கும்.

– செய்தி சிவராமன்,
புகைப்படம் மணிவண்ணன்

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A. Mouriyan.


A. Balakrishnan
B.R. BUILDERS
# 10/24, Vinayakar Koil Street,
Kulathupalayam,
Coimbatore - 641 042.
82488 03459
98657 32247


EPSON
CLOTHING INDIA
ஆண்கள், பெண்கள் மற்றும்
குழந்தைகளுக்கு தேவையான
உலகத்தரம் வாய்ந்த முன்னணி
பிராண்டட் ரெடிமேட் வகைகள்
எங்களிடம் கிடைக்கும்.
எங்களின் நிறுவனத்திற்கு மாவட்ட வாரியாக விநியோகஸ்தர்கள் தேவை
தொடர்புக்கு : 98840 30705 / 87545 50497
# 1/364, Indira Gandhi 2nd Street, Karapakkam - 600 097.
Email : epsonclothingindia@gmail.com
visit in : epsonclothingindia@facebook / epsonclothingindia@youtube / epsonclothingindia@twitter

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

